இன்றைய அறிமுகம்
நாளைய நாகரிகம்!!
ஆதிக்க ஆடைகளில்
சோபிக்க சோபனா
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 08 வியாழக்கிழமை (24 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 365

# மட்டக்களப்பு காட்டுப்பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை!

## ஹெலி மூலம் துருப்புக்கள் குவிப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 24

மட்டக்களப்புக் காட்டுப் பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பாரிய படை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பெரும் எண்ணிக்கையான துருப்புக்கள் தரைமார்க்கமாகவும், ஹெலி மூலமாகவும் குவிக்கப்பட்டு பாரிய அளவில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நடவடிக்கை தொடர்ந்து இடம் பெற்று வருவதாக உத்தியோக பூர்வமாகக் கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

புலித்தமான் ஓடை, முத்துக்கல், சந்திவெளித்திடல், கஞ்சாவூற்று, திண்டுகண்வெளி ஆகிய காட்டுப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நடவடிக்கை பற்றிய செய்திகளை ஸ்ரீலங்கா அரசு இது வரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## போதியளவு மா கையிருப்பில் உள்ளது!

### தட்டுப்பாட்டுக்கு இடமில்லை

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவில் போதியளவு மா கையிருப்பில் உள்ளதாகவும்—

தேவையான அளவு மாவை தமது பிரிவில் கொள்வனவு செய்யலாம் என்றும்—

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் பிரதேச செயலர்களுக்கு அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் மாவுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக கூறப்பட்டு வருகின்ற போதும்—

போதிய அளவு மாவை தமது களஞ்சியங்கள் வைத்துள்ளதாக தெரிவித்துள்ள திட்டப் பணிப்பாளர், தங்கள் பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு மேலதிகமாக விநியோகிப்பதற்கு மா தேவைப்பட்டால் புனர்வாழ்வுப் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யலாம் என்றும் பிரதேச செயலர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

### சில்லாலையில் கடந்த வாரம்

## இராணுவத்திடம் சிக்கிய 6 பேரும் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், நவ. 24

கடந்த 19 ஆம் திகதி சில்லாலைப் பகுதியில் விறகு வெட்டச் சென்ற சமயம் இராணுவத்தினரிடம் சிக்கிய ஆறு பேரும், நேற்று பலாலியில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சில்லாலை புகையிலைச் சங்கத்தடிப் பகுதியில் விறகு வெட்டச் சென்ற சமயம் 2 பெண்கள் உட்பட 6 பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் இன்று காங்கேசன்துறையில் இருந்து "பிளாம்பயான்" கப்பலில் பருத்தித்துறைக்கு அழைத்து வரப்படவிருப்பதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

(ஓ-3)

### கைதிகளைச் சந்திக்க

## செஞ். அதிகாரிகள் மூவர் இன்று பலாலி செல்வர்

யாழ்ப்பாணம், நவ. 24

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களை கவனிக்க செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் மூன்று அதிகாரிகள் நேற்று பலாலிக்கு சென்றுள்ளனர்.

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் நலன்கள் குறித்து கேட்டறியும் இவ்வதிகாரிகள், கடந்த வாரங்களில் பலாலி எல்லைப் பகுதிகளில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்ட பொதுமக்கள் குறித்தும் படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் சிலரை விடுவித்து அழைத்துக்கொண்டு இவர்கள் இன்று யாழ்ப்பாணம் திரும்புவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## புலி ஊடுருவியதாகக் கருதி சிப்பாயைச் சுட்ட சிப்பாய்!

### ஊர்காவற்றுறையில் சம்பவம்

கொழும்பு, நவ. 24

விடுதலைப் புலிகள் ஊடுருவி விட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிப்பாய் ஒருவரை நோக்கிச் சுட்டார் மற்றொரு சிப்பாய்.

ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்றுஇச்சம்பவம் இடம் பெற்றது.

தவறுதலாக இடம்பெற்ற இச்சூட்டுச் சம்பவத்தில் சூட்டுக்கு இலக்கான சிப்பாய் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-க)

## வடமராட்சிக் கடற்பரப்பில் ஹெலி, புக்காரா நோட்டம்

வல்வெட்டித்துறை, நவ. 24

வடமராட்சிக் கடற்பரப்புக்கு மேலாக கடந்த இரு தினங்களாக ஹெலி மற்றும் புக்காரா விமானம் பறந்து நோட்டமிடுகின்றன.

நேற்று முன்தினம் மாலை 5-30 மணிமுதல் இரவு 8மணி வரை ஹெலியும், புக்காராவும் மாறி மாறி சுற்றித்திரிந்தன.

நேற்றும் விமான, ஹெலி நோட்டம் இடம்பெற்றது.

(ஓ-155)

### நேற்று அதிகாலை

## வல்வைக் கடற்கரையில் ஒதுங்கிய 'டொல்பின்'!

வல்வெட்டித்துறை, நவ. 24

வல்வைக் கடலில் — கொத்தியால் கடற்கரைப் பகுதியில் நேற்று அதிகாலை 'டொல்பின்' மீன் ஒன்று காயத்துடன் குற்றுயிரான நிலையில் கரை ஒதுங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கரை ஒதுங்கிய இந்த மீன் வல்வெட்டித்துறை மீனவர் ஒருவரால் பிடிக்கப்பட்டது.

சாம்பல் நிறம் கொண்ட இந்த 'டொல்பின்' பத்தரை அடி நீளமும், நான்கே முக்கால் அடி அகலமும் சுமார் 300 கிலோ எடையும் கொண்டது.

இதை காப்பாற்ற எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இறந்த இந்த மீன் பின்னர் 5 ஆயிரம் ரூபாவுக்கு விலை போனதாகத் தெரிவிக்கப்பட்டது.

'டொல்பின்' மீன் கடலில் மனிதரை காப்பாற்றும் ஒரு ஜீவராசி என்பதும் இதற்கு சர்வதேச அரங்கில் ஜீவகாருண்ய அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கவை.

'டொல்பின்' வடமராட்சிக் கடற்பரப்பில் காண்படு அபூர்வம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-155)

## மழையின் மத்தியில் மாவீரருக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணம், நவ. 24

மாவீரர் வாரத்தின் மூன்றாம் நாளான நேற்று குடாநாடு எங்கும் மாவீரர் நினைவு நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

இந்த மண்ணுக்காக மரணித்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மக்கள் மழையின் மத்தியிலும் மாவீரர் நினைவாலயங்களுக்கு காலைமுதல் அணி அணியாகச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

குடா நாட்டில் எங்கு சென்றாலும் எழுச்சிக் கீதங்கள் ஒலிக்கின்றன. வீதிகள் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே அலங்கார வளைவுகள் உள்ளன.

அலங்கார வளைவுகளில் போராட்டத்தின் வடிவங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் காணப்படும் ஓவியங்கள் கலையம்சம் நிறைந்தனவாகக் காணப்படுகின்றன.

மாவீரர் வாரத்தில் குடாநாடுமுழுவதும் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது. மாவீரர் நினைவாலயங்களில் மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக பெருமளவில் கூடி நிற்பதை அவதானிக்கமுடிகிறது.

நினைவாலயங்களில் வரிசை வரிசையாக வைக்கப்பட்டுள்ள மாவீரர்களின் படங்களுக்கு முன்னால் தீபங்கள் ஒளிவிட்டு பிரகாசிக்கின்றன. அங்கு மக்கள் மலர்கள் வைத்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

இதேவேளை மாவீரர் வாரத்தையொட்டி குடாநாட்டில் பல இடங்களிலும் சிரமதானங்கள், கருத்தரங்குகள், கூட்டங்கள் என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இரவில் கலை நிகழ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னாலைப் பகுதியில் இரவில் விழுந்த ஷெல்கள்!

காரைநகர் முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு பொன்னாலை குடியிருப்புப் பகுதியை நோக்கி ஷெல்தாக்குதல் நடத்தப்பட்டது.

ஷெல் குண்டுகள் பொன்னாலை விளையாட்டு மைதானத்திலும் விழுந்து வெடித்தன. இதனால் அருகில் இருந்த மதில் சுவர் ஒன்று முற்றாகச் சேதமடைந்தது.

நெல்லியான் பகுதியில் பயன்தரு மரங்கள் சில முறிந்து நாசமாகின.

(ஓ-15)

## யாழ். தேர்தல் ஆட்சேப வழக்குகள் விசாரணை நேற்று ஆரம்பமானது!

கொழும்பு, நவ. 24

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்ட முறையை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மூன்று தேர்தல் ஆட்சேப மனுக்களும் நேற்றுக்காலை மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் சரத் எம். சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

பொது நிர்வாக அமைச்சின் பணிப்பாளர்நாயகம் டபிள்யு. பி. பெரேரா சாட்சியம் அளிக்கையில், கடந்த ஒகஸ்ட் மாதப் பொதுத் தேர்தலில் தாம் யாழ்ப்பாண மாவட்டத்தின் தேர்தல் அதிகாரியாகப் பணியாற்ற நியமிக்கப்பட்டமை பற்றிக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 11 தேர்தல் பிரிவுகள் உள்ள போதிலும் வாக்களிப்பு நிலையங்கள் 82 மட்டுமே அமைக்கப்பட்டிருந்தன.

4 லட்சத்து 27 ஆயிரத்து 496 பேர் தமது வாக்குகளைச் செலுத்த முடியவில்லை அதாவது 71 சதவீதமான வாக்காளர்களுக்கு வாக்களிக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றும் திரு பெரேரா தெரிவித்தார்.

சட்டத்தரணி ஜயந் சி. விக்ரமரத்ன சாட்சியைநெறிப்படுத்தினார்.

விசாரணைகள் அடுத்த மாதம் 13 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

(க)

### முச்சந்தி முரளி



மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் எண்ட மாதிரித்தான் [illegible] பாய்மாரின்ரை நிலை......!

## யுத்த நிறுத்தத்தின் பின் புலிகள் தாக்கவில்லை!

யாழ்ப்பாணம், நவ. 24

கடந்த வாரத்தில் விடுதலைப் புலிகளால் ஒரு தலைப்பட்சமாக கைக் கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை இடைநிறுத்தத்தை ஸ்ரீலங்கா அரசும், ஸ்ரீலங்காப் படைகளும் புறக்கணித்த பின்னரும் கூட, விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா படையினருக்கு எதிராக இதுவரை எந்த [illegible] மேற்கொள்ளவில்லை.

[illegible] இத்தகவலை வெளியிட்டது.

ஆனால் ஸ்ரீலங்காப் படைகள் தமிழ் மக்களுக்கு எதிராகவும், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன என்றும்—

ஸ்ரீலங்கா செய்தித் தொடர்பு சாதனங்களும் தாக்குதல் தொடர்பான செய்திகளை வெளியிடாமல் மௌனம் சாதித்து வருகின்றன என்றும்—

"புலிகளின் குரல்" சுட்டிக்காட்டியுள்ளது.

(உ-3)

### காமினி கொலைச் சம்பவம்:

## விசாரணைக்கு நிபுணர்கள்; அனுப்ப இந்தியா இணக்கம்

காமினி கொலை குறித்து விசாரணை செய்வதற்கு இரசாயனப் பகுப்பாய்வு மற்றும் வெடிகுண்டுத் தாக்குதல் முதலிய துறைகளைச் சேர்ந்த நிபுணர்களின் உதவியை இலங்கைக்கு வழங்குவதற்கு இந்தியா இணங்கியுள்ளது.

கொழும்புத் தூதுவராலய வட்டாரங்கள் செவ்வாய்க்கிழமை இத்தகவலை வெளியிட்டதாக பிரெஞ்சு பத்திரிகை சேவை நேற்று தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்றே நிபுணர்களை அனுப்ப இந்திய அரசு முன்வந்திருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகர் மூலம் இந்த விடயம் இலங்கை அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் —

எனினும் விசாரணை நடத்துவதற்கு இலங்கை செல்லவிருக்கும் நிபுணர்களின் பெயர் விவரம் வெளியிடப்படவில்லை என்று கூறப்பட்டது.

ராஜீவ்காந்தி குறித்து விசாரணை நடத்திய டி. ஆர். கார்த்திகேயனையும், பீ. சந்திரசேகரனையும் இந்த விசாரணைக்கும் அனுப்பும்படி கொல்லப்பட்ட காமினியின் குடும்பத்தவர்கள் கோரியிருப்பது தெரிந்ததே.

(உ-க-6)

## சிறந்த அலங்கார வளைவுகளுக்குப் பரிசு!

யாழ்ப்பாணம், நவ. 24

மாவீரர் வாரத்தை ஒட்டி குடாநாட்டில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள வளைவுகள், அலங்காரங்கள் ஆகியவற்றில் சிறந்தவற்றுக்கு பரிசு வழங்க தமிழீழ நிர்வாக சேவை திட்டமிட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மேற்படி பரிசுத் திட்டம் தொடர்பாக தமிழீழ நிர்வாக சேவை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

இப்பரிசுத் திட்டத்தினை செயற்படுத்துவதற்கும், மதிப்பீட்டை மேற்கொள்வதற்கும் தமிழீழ நிர்வாக சேவையின் மதிப்பீட்டுக் குழு வருகைதரவுள்ளது. இம்மதிப்பீட்டுக் குழுவினால் பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொண்டு மதிப்பீட்டுப் புள்ளிகள் வழங்கப்படும்.

★ வீதிப் பாவனையாளர்களின் பாதுகாப்பிற்கும் சௌகரியத்திற்கும் பாதகமில்லால் வளைவுகள் அமைத்திருத்தல்.

★ வடிநீர் குழாய், வீதிக்கு உரித்தான மைல் கட்டை, விளக்குத்தூண், வழிகாட்டிப் பாலம் முதலியன மேல் தாங்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களை மீளளிக்க தவறிய அரசியல்வாதிகள்!

### பொலிஸ் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, நவ. 24

நீர்கொழும்புபொலிஸாரால் ஜே.வி.பி.பயங்கரவாதம் நிலவிய காலத்தில் பாதுகாப்புக் கருதி அமைச்சர்கள் உட்பட அரசியல்வாதிகளுக்கு வழங்கப் பட்ட சுமார் நூறு ஆயுதங்கள் இது வரை மீள ஒப்படைக்கப் படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக முறைப்படியான விசாரணைகளை நீர்கொழும்புப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆயுதங்களை மீள ஒப்படைக்கத் தவறியவர்களில் முன்னாள் அமைச்சர் விஜேபால மெண்டிசும் ஒருவர் எனக் கூறப்படுகின்றது.

(உ-க-6)

## "மாவீரர் நிதியம்" சனியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 24

மாவீரர் வார நிகழ்வுகளில் மக்கள் தங்கள் பங்களிப்பைச் செலுத்துவதற்கு வசதியாக "மாவீரர் நிதியம்" ஒன்று எதிர்வரும் சனியன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இது தொடர்பாக தமிழீழ நிர்வாக சேவை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வருடா வருடம் நவம்பர் 21 ஆம் நாள் தொடக்கம் 27 ஆம் நாள் வரை தமிழீழத்தில் மாவீரர் வாரம் மிகவும் உணர்வுபூர்வமாக தமிழீழ

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டால்

## சிறுபான்மை இன மக்கள் கஷ்டங்களை அநுபவிப்பர்!

### நாடாளுமன்றத்தில் முஹம்மது

கொழும்பு, நவ. 24

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டால் சிறுபான்மையினர் கஷ்டங்களை எதிர்நோக்க நேரிடும் ஆகவே நாம் அதை ஆதரிப்பதற்கில்லை.

முன்னாள் சபாநாயகர் எம். எச். முஹம்மது நேற்று நாடாளுமன்றில் உரையாற்றியபோது இவ்வாறு கூறினார்.

(ஓ க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## திருப்தி கூடாது

கட்டி எழுப்பப்படவுள்ள தமிழீழத்தின் வளர்ச்சிக்கு ஆயுதத்தை மட்டும் நம்பியிராது, அனைத்துத் துறைகளிலுமே வளரவேண்டும் என்பதில் நாம் அக்கறையாக உள்ளோம்.

இவ்வாறு அறிவித்துள்ளார் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன்.

நிதர்சனம் நிறுவனத்தின் ஒளி வீச்சுப் பிரிவு, புலிகளின் குரல் வானொலியின் தொழில்நுட்பப் பிரிவு, படப்பிடிப்புப் பிரிவுகளைச் சேர்ந்த போராளிகளையும் ஏனையோரையும் சந்தித்துக் கலந்துரையாடிய போது தலைவர் இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

இந்த மண்ணினதும், மக்களினதும் விடுதலைக்காக மண்ணின் மைந்தர்கள் இப்போது ஆயுதம் ஏந்திப் போராடுகிறார்கள். அது தவிர்க்க முடியாததும், தடுக்க முடியாததும் ஆகிவிட்டது. ஆனால் ஆயுதமும் போராட்டமுமே வாழ்க்கை என்ற நிலை நீண்டகாலம் நீடிக்கமுடியாது. மண்ணுக்கும், மக்களுக்கும் விடுதலை கிடைத்ததும் ஆயுதத்தின் தேவை அவசியமில்லாது போய்விடும்.

அதன் பின்னர் சுதந்திரமான, நீதியான, வளமான வாழ்வு மக்களுக்குக் கிடைக்க வேண்டும். அப்போது தான் தமிழ் மக்களது வாழ்க்கை வளர்ச்சி அடையும். அந்த வளர்ச்சி சமூகத் தேவைகளின் எல்லாப் பிரிவுகளிலும், அம்சங்களிலும் தேவை.

அந்த வளர்ச்சியை அப்போது, விடுதலை கிடைத்த பின்னர், உருவாக்குவோம். அது வரைக்கும் போராட்டத்திலேயே எமது சக்தியையும், ஆற்றல்களையும் பயன்படுத்தி அதில் வெற்றி காண்போம் என்று இருந்துவிடக் கூடாது. இப்போதிருந்தே எல்லாத்துறைகளிலும் தமிழர்கள் தம்மை வளர்த்துக் கொள்வது அவசியம். அதுவும் நடக்க வேண்டும்; இதுவும் நடக்க வேண்டும்.

இதனையே தலைவர் பிரபாகரன் அவர்களும் வலியுறுத்தி உள்ளார். சொல்வதோடு நிற்கும் ஏனைய நாட்டுத் தலைவர்களைப் போலன்றி சொல்லும் செயலும் ஒன்றாகச் செயற்படுபவர் அவர்.

எதிர்காலத்தில் எலெக்ரோனிக் — கணனி யுகம்— வரப்போகிறது. நாம் அதில் வேகமாக வளர்வதன் மூலம் தான் மாற்றத்தை அடைவோம் என்ற தலைவரின் கருத்தை தமிழ் மக்கள் அனைவரும் மனதில் பதித்துக் கொள்ள வேண்டும்.

எதிர்வரும் இருபத்தோராம் நூற்றாண்டு, 20ஆம் நூற்றாண்டைவிட மிகவும் நவீனமான, வேகமான வளர்ச்சியுடைய யுகமாக இருக்கப் போகிறது. அந்த யுகத்தில் வாழத் தகுதியுள்ளவர்களாக எம்மை ஆக்கிக் கொள்வது எமது பொறுப்பே. வேறு எவரும் அத்தகைய தகுதியை எமக்காகப் பெற்றுத் தருவார்கள் என்று எதிர்பார்த்திருக்க முடியாது.

ஆகையால் அந்தப் புதிய யுகத்தில் வாழ்வதற்கான, எமது எதிர்கால சந்ததியினர் வளத்தோடு வாழ்வதற்கான, அத்திவாரம் இப்போதே இடப்பட வேண்டும்.

கடந்த நான்கு, ஐந்து தசாப்தங்களாக தமிழ் மக்களின் வாழ்க்கை முன்னேற்றமும், தமிழ் மண்ணின் வளர்ச்சியும் பெரிதும் தடைப்பட்டு தறுக்கணித்துப் போயிருக்கின்றன. சிங்கள அரசுகள் தமிழர்களின் நலன்களை தொடர்ச்சியாகப் புறக்கணித்து வந்தது மட்டுமன்றி, அவர்கள் மீது அடக்குமுறையையும் கட்டவிழ்த்து வந்தன. அதனால் இப்போதைய உலக வளர்ச்சியோடு தமிழர்களால் ஒத்து ஓட முடியவில்லை.

இருபத்தோராம் நூற்றாண்டிலும் இத்தகைய நிலை தொடரக்கூடாது. ஆதலால் இப்போதைய வசதிக் குறைவுகளையும் பின்னடைவுகளையும் நினைந்து சோர்ந்து போகாமல், ஒவ்வொருவரும் தத்தமக்கு ஆற்றல் உள்ள துறைகளில் தங்கள் அறிவையும் பயிற்சியையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு தலைவர் கூறியது போல ஒவ்வொருவரும் தாம் செய்யும் பணியோடு திருப்தி அடையாது, தொடர்ந்து வளர முயற்சி செய்ய வேண்டும்.

1980 வேலை நிறுத்தம்:

# வேலை இழந்த- உயிரிழந்த அனைவருக்கும் நிவாரணம்

கொழும்பு, நவ. 24

1980 ஜூலை வேலை நிறுத்தத்தில் பங்கு பற்றியதால் வேலை இழந்த அரச ஊழியர்கள், அதனால் வேதனை தங்காது தற்கொலை செய்து கொண்ட அல்லது உயிரிழந்த அரச ஊழியர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடும் நிவாரணமும் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

மீண்டும் வேலை கிடைக்காத நிலையில் தற்கொலை செய்து கொண்ட அல்லது உயிரிழந்த அரச ஊழியர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு லட்சம் ரூபா நட்டஈடுவழங்கப்படும்.

உயிருடன் உள்ள, வேலையிழந்த 60 வயதுக்குட்பட்ட அரச ஊழியர்களுக்குஎல்லாச் சம்பள உயர்வுகளுடன் மீண்டும் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓய்வூதியமும் மற்றும் நன்மைகளும் வழங்கப்படும்.

இது தொடர்பான முடிவுகளை பிரதி அமைச்சர் அத்தாவுட செனவிரத்னா தலைமையிலான குழு எடுத்துள்ளது.

இம் முடிவுகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியவுடன் திட்டம் அமுல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

நீதிமன்ற உத்தரவுக்கு இணங்க

# வீடியோப் படங்களை ஒப்படைக்க காமினி குடும்பத்தினர் பின்னடிப்பு

கொழும்பு, நவ. 24

காமினி திஸாநாயக்கா படுகொலைவழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் சம்பா புத்திபாலா முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

காமினி திஸாநாயக்கா பேசிய பிரசாரக்கூட்டங்கள் எல்லாம் வீடியோவில் படமாகப் பிடிக்கப்பட்டதாகக் கூறிய காமினி திஸாநாக்காவின் குடும்பத்தினர், அவ்வீடியோப் படங்களை நீதிமன்ற உத்தரவிற்கிணங்க தம்மிடம் இதுவரை கையளிக்கவில்லை என்று இரகசியப் பொலீஸ் அதிகாரி அசோகா விஜேதிலக நீதிவானிடம் தெரிவித்தார்.

அவ்வீடியோப் படங்களை வாங்கி தொலைக்காட்சியில் ஒளிபரப்பும்படி நீதிவான் முந்திய தவணையின்போது பொலீஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

கிராண்ட்பாஸ் கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்காக அவர்களை இம்மாதம் 24ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி நீதிவான், காமினி திஸாநாயக்காவின் குடும்பநலனைக் கவனிக்கும் சட்டத்தரணிக்கு உத்தரவிட்டார்.

மேல் விசாரணை அடுத்த மாதம் ஆறாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# சிங்கள மக்களின் ஆதரவை சந்திரிகா தவறாக மதிப்பிட அனுமதியோம்

## "திரிசூல" சிங்கள இதழ் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 24

சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் பதவிக்கு வந்த சந்திரிகா தேர்தலில் அவர்கள் அளித்த ஆதரவை தவறாக மதிப்பீடு செய்வாரானால் அதனை எம்மால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

"திரிசூல" சிங்களப் பத்திரிகை முன்கண்டவாறு அரசை எச்சரித்துள்ளது.

சுமார் 2 கோடி நாட்டு மக்களில் 74 சதவீதமானோர் சிங்களவர்கள். ஆயினும் 12 சதவீதமான தமிழ், முஸ்லிம் மக்களாலேயே அரசு உருவாக்கப்பட்டுள்ளது. ஆட்சியாளர்கள் ஒவ்வொரு இனத்தவர்களுக்கும் பல வாக்குறுதிகளை அளித்துள்ளனர்.

ஜனாதிபதியையும், அமைச்சர்களையும் மக்களே தேர்ந்தெடுத்துள்ளனர். மக்களின் நிதியில் இருந்தே அவர்கள் சம்பளம் பெறுகிறார்கள். எனவே இந்த ஆட்சியாளர்கள் மக்களின் சேவகர்கள்.

சந்திரிகா உட்பட அரசின் ஏனையோர் விடும் தவறுகளை மக்கள் முன் வைக்க நாம் தயாராக உள்ளோம்.

— இவ்வாறு அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## 2 ஆயிரம் திரிபோஷா பக்கட்டுகள்

யாழ்ப்பாணம், நவ. 24

வட பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திற்கு 2 ஆயிரம் பக்கட் திரிபோஷா வந்து சேர்ந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இந்த திரிபோஷா பக்கட்டுகள் வழங்கப்படும். (ஐ-17)

## புதிய இலக்கங்களை பயன்படுத்த அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 24

தபால்களை விநியோகிப்பதற்கு வசதியாக புதிய இலக்கங்களைப் பாவிக்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

மக்கள் புதிய பழைய இலக்கங்களை மாறி, மாறி பாவிப்பதினால் தபால்களை விநியோகிப்பதற்கு ஊழியர்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

ஆகவே புதிய இலக்கங்களை பயன்படுத்துமாறு புதிய இலக்கங்களை வீட்டுக் கேற்றில் குறிப்பிடுமாறும் பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார். (இ-17)

# சுய முயற்சியில் வீடுகட்ட உதவும் புதிய திட்டம்

கொழும்பு, நவ. 24

தமக்கு என்று சொந்தமாக வீடு கட்ட முயற்சிப்பவர்களுக்கு உதவும் திட்டம் ஒன்றை வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு தயாரித்துள்ளது.

"இதன்படி வீடமைப்புக் கடனுக்கான வட்டிவீதத்தில் மாற்றம் செய்யப்படவுள்ளது. திருப்பிச் செலுத்தப்படாத கடன்கள் மீள் அட்டவணைப்படுத்தப்படும்.

கடனைத் திருப்பிச் செலுத்தத்தவறியவர்களிடமிருந்து தண்டனைப்பணம் அறவிடப்படமாட்டாது"— இவ்வாறு அமைச்சர் நிமால் சிறிபாலடீ சில்வா தெரிவித்தார்.. (ஐ-எ)

# சுகாதாரப் பகுதியினருக்கு 14 ஜெனரேட்டர்கள் வந்தன

## இயக்குவதற்கு எரிபொருள் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 24

வட பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திற்கென 14 ஜெனரேற்றர்கள் "ஹபரண" கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்த ஜெனரேற்றர்கள் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு உடனடியாகவே யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகர சுகாதாரப் பகுதிக்கும், யாழ். போதனா வைத்தியசாலைக்கும் இரு ஜெனரேற்றர்களை சுகாதார இரணைக்களம் வழங்கியுள்ளது.

இதேவேளை—

14 ஜெனரேட்டர்கள் வந்துள்ள போதிலும் அவற்றை இயக்குவதற்குத் தேவையான டீசல்இல்லாததால் அவற்றை உடனடியாக இயக்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## புலிகளின் குரல் வானொலியில்

**24 — 11 — 1994**

**வியாழன் இரவு**

- ★ 8-01 — மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி— ந. கிருஷ்ணா எழுதிய "செஞ்சுடர் ஏற்றிச் சென்ற மாவீரர்"
- ★ 8-20 — உழைப் போம் உயர்வோம் — நிகழ்ச்சியில் "தண்ணீர் பிரச்சினை தீரப்போகிறது" குறுநாடகம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40—சிறப்பு நிகழ்ச்சி —வேலணையூர் சுரேஸ் எழுதிய "சண்டைக்கு புலிகள் சளைத்தவரல்ல அன்றைக்கே உரைத்தது தொண்டமனாறு"
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**25 —11 — 1994**

**வெள்ளி காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்.
- ★ 7-15 மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7 - 35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 7-40 — மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி— ந. கிருஷ்ணா எழுதிய "மாவீரர் புகழ்பாடுவோம்"
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## சிறுவர் விளையாட்டு உபகரணங்கள்

யாழ். மாநகராட்சி மன்றம் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களை அமைத்து வருகின்றது.

சனசமூக நிலையங்கள், பாலர் பாடசாலைகளுக்கு இந்த விளையாட்டு பொருள்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## பஸ் நிலையத்தில் தபால் பெட்டி அமைக்கப்படும்

பொதுமக்களின் வசதிக்காக யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள மத்திய பஸ் நிலையத்தில் தபால் பெட்டி ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ், பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

பொது இடங்களில்மேலும் தபால் பெட்டிகளை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் கூறினார். (ஐ-17)

## குடும்ப விவரத் திரட்டு

குடும்ப விவரத் திரட்டுப் பணிகள் தற்போது வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்கள் தத்தமது பிரிவைச் சேர்ந்த கிராமசேவையாளர்களிடம் இருந்து உரிய படிவங்களை பெற்று நிரப்பி கொடுக்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது. (க-15)

# மனித வரலாற்றில் என்றுமே காணாத மாவீரர்களின் இலட்சிய வேட்கை

உன்னதமான மாவீரர்களை நினைவு கூரும் நாட்களில் மெய்சிலிர்த்து மனமுருகி உறுதி மிக்க கரங்களை உயர்த்தி 'தமிழீழம் நமதே' என ஆணையெடுப்போம்.

மாவீரர்களது இலட்சிய வேட்கை சாதனைகள், ஈகம், மனிதவரலாற்றில் முன்னெப்போதும் காணப்படாதவை.

தமிழீழத் தமிழர் சிங்களப் பேரினவாதத்துடன் மண்டியிட்டுக் கோரிக்கை விடுத்த காலம் போய் தமது தலைவிதியை நாமே நிர்ணயிப்பதற்கு ஆற்றல் கொண்டுள்ளார்கள் என்பதை அனைத்துலகிற்கும் வெளிச்சமிட்டுக் கூறி நிற்பவர்கள் மாவீரர்கள்.

தமிழீழத் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் தமிழீழ மக்களை நேசித்த மாவீரர்களின் வரலாறுதான் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்ட வரலாறு என்றாகி விட்டது.

"அடிமைத் தளையை நொருக்குவோம், புதிய சமுதாயம் படைப்போம்" எனத் தமிழீழ மக்கள் உறுதியெடுப்பர், என்ற உள்ளத்துணர்வுடன் வித்தாகிவிட்டவர்களை நினைவு கூருவோம்.

ஸ்ரீலங்கா பேரினவாதம் எத்[illegible] எடுத்தாலும் எம்மால் முறியடிக்க முடியும் என்ற உறுதியைத் தருபவர்கள் மாவீரர்கள்.

மனதின் அடித்தளத்தில் கருக்கொண்ட எமது விடுதலைக்கான அனைத்துச் செயற்பாடுகளாக உருக்கொண்டிருப்பவர்கள் மாவீரர்கள்.

மாவீரர் வாரத்தில் வட்டம் தோறும் நிறுவப்பட்டுள்ள மாவீரர் ஆலயங்களுக்குச் சென்று மலரஞ்சலி செலுத்துவது நமது கடமையாகும். நவம்பர் 27ஆம் நாள் விடியலில் 12 மணி ஒரு செக்கனுக்கு [illegible] 12மணி02 நிமிடத்திற்கு இல்லங்கள், பாடசாலைகள், பொது அமைப்புகள், அலுவலகங்களில் மாவீரர் சுடரேற்றி உறுதியெடுப்போம்.

'தமிழீழத் தேசிய தேசத்தின் விடியலில் மக்களின் வளமான வாழ்வு மலரும்' என்ற நம்பிக்கையுடன் போராடி வித்தாகிவிட்ட மாவீரர் நினைவுகளுடன் எதிர்காலத்தை எதிர்கொள்வோம்! வரும் சோதனைகளை வெல்லுவோம்! நமது தாயகம் நமதாகட்டும்!

கிராமிய
உழைப்பாளர் சங்கம்,
யாழ். மாவட்டம்.

# உணவு தேவை குறித்து விவரம் அனுப்ப பணிப்பு!

## புதிய அரச அதிபர் அவசர செய்தி

யாழ். மாவட்டத்துக்கு அவசர தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் பற்றிய விவரத்தை உடன் தமக்கு அனுப்புமாறு யாழ். அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் யாழ் செயலக திட்டப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்.

யாழ். அரச அதிபராக இடமாற்றம் பெற்ற பின்னர் மேற்கண்ட தகவல்களை அனுப்புமாறு கோரி அவசர செய்தி ஒன்றை கடந்த செவ்வாய்க்கிழமை அவர் அனுப்பியுள்ளார்.

இதேவேளை —

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும்—

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகளுக்கு தேவையான நிதி விவரம் குறித்தும் — அவர் விவரங்களை கேட்டுள்ளார். (ஐ-3)

# இத்தாலிய பத்திரிகையுடன் பைபிள் இலவச இணைப்பு!

மதம் ஒரு அபின் என்று மார்க்ஸியத்தின் தந்தையான கார்ல் மார்க்ஸ் தெரிவித்திருந்தார்.

ஆனால் இத்தாலியில் முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சியின் நாளிதழ் "லாயூனிட்டா" தனது விற்பனையை அதிகரிப்பதற்காக பைபிளின் புதிய ஏற்பாட்டை, கடந்த வாரம் புதன் கிழமை இதழுடன் வாசகர்களுக்கு இலவசமாக வழங்கியதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதனைப்பார்த்து கார்ல் மார்க்ஸ் தனது புதைகுழியில் நெளிந்திருப்பார் என்றும் ! அச்செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (ஐ-எ)

# மாவீரர்களின் தியாகத்தை சொல்லில் வடிக்க முடியாது

## நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரை

சாவகச்சேரி, நவ. 24

எமது மக்களின் விடுதலைக்காக ஆகுதியாகிய மாவீரர் நாட்கள் புனித நாட்களாகும். இவர்களது தியாகத்தை சொல்லில் வடிக்க முடியாது.

சாவகச்சேரி வட்டத்தில் நகரசபை வளவில் அமைந்துள்ள மாவீரர் நினைவுப் பந்தலில் தேசியக் கொடி ஏற்றலின் பின்னர் நடந்த நினைவுரைக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அருந்தவபாலன் ஆசிரியர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்.

எமக்காக தங்களை அர்ப்பணித்த இத் தியாகிகள் பாதத்தை போற்றிப் பணிதல் வேண்டும் என்று குறிப்பிட்டார். (க-31)

# சேர். பொன். இராமநாதன் உருவச்சிலை 30இல் திறப்பு

வலிகாமம் தெற்கு, நவ. 24

சேர். பொன் இராமநாதனின் நினைவு நாளை முன்னிட்டு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அன்னாரது உருவச்சிலையொன்று இம் மாதம் 30ஆம் திகதி காலை 9மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் முயற்சியினால் நிறுவப்பட்டுள்ள இவ்வுருவச்சிலையை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத் தலைவி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி திறந்துவைப்பார்.

இராமநாதன் நுண்கலைப் பீடத் தலைவர் கலாநிதி சபா. ஜெபராசா இதில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

சேர். பொன், இராமநாதன் நினைவுதினத்தையொட்டி பேச்சு, கட்டுரைப் போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தவும்—

இப் போட்டிகளில் முதலிடம் பெறுவோருக்கு தங்கப்பதக்கங்கள் வழங்கவும் —

சேர். பொன். இராமநாதனின் நினைவு நாளான நவம்பர் மாதம் 30ஆம் திகதி மாலை பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (க-152)

# இலக்கியப் பேரவையின் ஆக்க இலக்கிய பரிசுகள்

யாழ்ப்பாணம், நவ 24

யாழ். இலக்கிய வட்டத்தின் இலக்கியப் பேரவையால் 1993 ஆம் ஆண்டுக்கான ஆக்க இலக்கியப் பரிசுகளுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நூல்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பரிசு பெறும் நூல்களும் அவற்றை எழுதியோர் விவரமும் வருமாறு:-

- ★ இலக்கியம் — கலாநிதி சி. மௌனகுரு எழுதிய ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு.
- ★ நாவல் — மலரவன் எழுதிய "போர் உலா"
- ★ சிறுகதை — செங்கை ஆழியான் எழுதிய "யாழ்ப்பாணத்து இராத்திரிகள்"
- ★ கவிதைத் தொகுதி — புதுவை இரத்தினதுரை எழுதிய "நினைவழியா நாட்கள்"
- ★ காவியம் — காரை. செ. சுந்தரப்பிள்ளை எழுதிய "காவேரி"
- ★ நாடகம் — ஐவர் எழுதிய "கோலங்கள் ஐந்து"
- ★ சிறுவர் இலக்கியம் — வாகரை வாணன் எழுதிய குழந்தைப் பாடல்.
- ★ பல்துறை — ப. புஷ்பரத்தினம் எழுதிய பூநகரி தொல்பொருள் ஆய்வு.
- ★ சமயம் — கலாநிதி அ. வேல்முருகு எழுதிய "மலையக மக்களின் சமய நம்பிக்கை"
- ★ அறிவியலுக்கான பரிசு — நூல் எதுவும் இல்லை.

இவை தவிர இலக்கியப் பேரவையின் சான்றிதழ்கள் பதினொரு நூல்களுக்கு கிடைத்துள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

- ★ சிறுகதைத் தொகுதி — அன்பு மணியின் வரலாற்றுச் சுவடுகள், திக்குவலை கமாலின் குருட்டு வெளிச்சம்.
- ★ நாடகம் — சொக்கனின் மானத்தமிழ் மறவன், அருணா செல்லத்துரையின் "வீடு"
- ★ கவிதைத் தொகுதி — சாரதாவின் கவிச்சுவடு.
- ★ காவியம் — வாகரை வாணனின் அருளாளர் அந்தோனியர்.
- ★ நாவல் — தில்லைச் சிவனின் நான்.
- ★ நாவல் — தாமரைச் செல்வியின் "தாகம்"
- ★ பல்துறை — க. தங்கேஸ்வரியின் "குளக்கோட்டன் தரிசனம் — ஓர் ஆய்வு நோக்கு"
- ★ சிறுவர் இலக்கியம் — வாகரை வாணனின் பாலர் தமிழ்ப்பாட்டு.

மேற்படி நூல்களை எழுதிய ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்கான பரிசளிப்பும் சான்றிதழ் வழங்கலும் அடுத்த மாதம் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளன. (ஐ)

## விபத்தில் படுகாயம்

கல்வியங்காடு 3ஆம் கட்டயடியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற லொறி-சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

சைக்கிளில் சென்றவரான முரசுமோட்டையைச் சேர்ந்த பி. கணேசலிங்கம் (வயது-25) என்ற யாழ். பல்கலைக்கழக மாணவனே காயமடைந்தவராவர்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ஐ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ போராட்ட வளர்ச்சிப் பாதையை சித்திரிக்கும் கோண்டாவில் ரயில் கண்காட்சி

கோண்டாவில், இருபாலை வீதியில், குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஒரு ரயில். ஆறு ரயில் நிலையங்கள்.

ரயில், ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் தரித்துச் செல்கிறது.

சிறுவர், சிறுமியர், பெண்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் குழுமி நின்று ரயிலைப் பார்க்கிறார்கள். ரயில் நிலையங்களில் ஏறி இறங்குகிறார்கள்.

இவர்களில் பலர் ரயிலையே கண்டிராத இளசுகள் 1990இல் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமான சமயம் குழந்தைப் பருவத்தில் இருந்தவர்கள்.

## யுத்தம் - சமாதானம் மாறி மாறி வரும் நிகழ்வுகள்

சமாதானப் பேச்சுக்கள் தொடங்கி இருப்பதால் ரயில் ஓட்டமும் தொடங்கி விட்டதோ என்று சிலருக்கு எண்ணத் தோன்றும்.

ஆனால் இது அசல் ரயில் அல்ல. கண்காட்சிக்காக அமைக்கப்பட்ட ரயிலும், ரயில் நிலையங்களுமே.

பேச்சுவார்த்தை ஆரம்பித்திருப்பதால் சமாதானம் வந்துவிட்டது என்று எண்ணுபவர்களுக்கு சமாதானம் எங்கே நிற்கிறது என்பதை இந்த ரயில் கண்காட்சி தத்ரூபமாகச் சித்திரிக்கிறது.

### மாவீர வார ஏற்பாட்டில்

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ். பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம். யாழ். மாவட்ட வெதுப்பக சங்கம் ஆகியவற்றின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கண்காட்சி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கண்காட்சியில் ஆறு ரயில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழீழப் போராட்டத்தின் வளர்ச்சிப் பாதையைச் சித்திரிக்கும் வகையில் ஆறு ரயில் நிலையங்களுக்கு ஊடாக ரயில் செல்வதாக கண்காட்சி அமைந்துள்ளது.

### சரியான பாதையில்

ரயிலின் என்ஜின், தேசியத் தலைவரை மையமாகக் கொண்டது.

தமிழீழப் போராட்டம் எவ்வாறு அவர் தலைமையில் வழி நடத்தப்படுகிறது என்பதை அது சித்திரிக்கிறது.

ரயில் என்ஜின் தன்னுடன் இணைக்கப்பட்ட பெட்டிகளை குறிப்பிட்ட ரயில் நிலையங்களுக்கு கொண்டு போய்ச் சேர்த்து விடுவது போல தமிழீழப் போராட்டத்தை திட்டமிட்டு சரியான பாதையில் வழி நடத்திச் செல்கிறார் தலைவர்.

தமிழீழப் போராட்ட வரலாற்றில் யுத்தமும் சமாதானப் பேச்சுக்களும் மாறி மாறி இடம் பெற்றுவரும் நிகழ்வுகள். ஆனால் இறுதியில் 'தமிழீழமே நிரந்தர தீர்வு என்பதை கண்காட்சி விளக்குகிறது.

அமைக்கப்பட்டுள்ள 6 ரயில் நிலையங்களிலும் முதலாம் ரயில் நிலையம் ''ஏன் இந்தப் போராட்டம்?'' என்பதை விளக்குகிறது.

இரண்டாவது ரயில் நிலையம் கரந்தடிப்போரின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் விளக்குகிறது.

மூன்றாவது ரயில் நிலையம் இந்திய — ஈழப்போரை விளக்குகிறது.

நான்காவது ரயில் நிலையம் இரண்டாவது ஈழப்போரை விளக்குகிறது.

ஐந்தாவது ரயில் நிலையம் போரையும் சமாதானத்தையும் விளக்குகிறது.

ஆறாவது ரயில் நிலையம் மலரும் தமிழீழத்தை விளக்குகிறது.

ஒவ்வொரு ரயில் பெட்டியிலும் இவற்றை விளக்கும் படங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.

ரயில் ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் நிற்கும் போது இது பற்றிய விளக்கம் கொடுக்கப்படுகிறது.

''பாதிவழி கடந்த பயணம் நெஞ்சில் எழும் நினைவுகளுடன் வரலாற்றுக்கண்காட்சி'' என்ற பெயர் கண்காட்சிக்கு இடப்பட்டுள்ளது.

### ரயில் நிலையம் — 1

''ஏன் இந்தப் போராட்டம்? என்ற பெயரைத் தாங்கி நிற்கிறது முதலாவது ரயில் நிலையம்.

1956 ஆம் ஆண்டு முதல் சிங்கள பேரினவாத அரசுகளின் அடக்குமுறைகளைச் சித்திரிக்கும் காட்சிகள் இதில் இடம் பெற்றுள்ளன.

★ எஸ், டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவினால் 1956இல் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம்.

★ 1957 பண்டா—செல்வா ஒப்பந்தம்.

★ பண்டா — செல்வா ஒப்பந்தத்தைக் குழப்ப ஜே. ஆர். ஜெயவர்த்தனா கண்டிக்கு மேற்கொண்ட பாத யாத்திரை.

★ 1958 இனக்கலவரம்.

★ 1961 யாழ். கச்சேரி முன் சத்தியாக் கிரகம்.

★ 1974 தமிழாராய்ச்சி மாநாடு.

★ 1981 யாழ். நூலகம் எரிப்பு.

மேற்கண்ட காட்சிகள் தமிழீழப் போராட்டம், ஆரம்பமாவதற்கும் பின்னர் படிப் படியாக உத்வேகம் அடைந்ததுக்குமான காரணிகளைத் தத்ரூபமாகச் சித்திரிக்கின்றன.

1958 இனக்கலவரத்தின் போது தமிழர்கள் எரியும் நெருப்பில் தூக்கிப் போடப் படும் காட்சி.

1961 சத்தியாக்கிரகத்தின் போது, அப்பாவிச் சத்தியாக்கிரகிகள் மீது அப்போது ஆட்சியில் இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அரசின் ஏவலாளிகளான ஆயுதப் படையினர் நடத்திய கண்மூடித்தனமான குண்டாந்தடித் தாக்குதல்கள்.

1974 தமிழாராய்ச்சி மாநாட்டைக் குழப்புவதற்கு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் அல்பிரட் துரையப்பாவும் சேர்ந்து சதிசெய்யும் காட்சி.

ஜே. ஆரின் பையில் இருந்து எடுத்த தீப்பந்தம் மூலம் காமினி திஸாநாயக்கா யாழ். நூல் நிலையத்துக்குத் தீயிடும் காட்சி கடந்த கால துரோகத்தனங்களையும் அடக்குமுறைகளையும் எமது மனம் கண்முன் ஒருதரம் கொண்டு வந்து நிறுத்துகின்றன.

### ரயில் நிலையம் — 2

''கரந்தடிப்போரின் தோற்றமும் வளர்ச்சியும்'' பற்றிய கருத்தோவியங்களைக் கொண்டது. ''தமிழீழத் தாயகம்'' என்ற பெயரைக் கொண்ட இரண்டாவது ரயில் நிலையம்

தாயகம் நோக்கிய பயணம் இங்கே தான் ஆரம்பமாகிறது.

தமிழீழப் போராட்டத்தில் மாவீரராகிய முதலாவது விடுதலைப் புலிகள் போராளி லெப். சங்கரின் (செல்லச் சந்திரன் சத்தியநாதன் — கம்பர்மலை வல்லை) படம் இந்த ரயில் நிலையத்தை அலங்கரிக்கிறது.

கரந்தடிப் போராட்டத்தின் ஆரம்பம் துரோகிகள் ஒழிப்பு.

1975ஆம் ஆண்டில் அல்பிரட் துரையப்பா சுட்டுக் கொல்லப்படுகிறார். துரையப்பாவைக் கொன்றவர்களைக் கண்டு பிடித்து சிங்கள அரசுக்கு வக்காளத்து வாங்க முயன்ற ரகசியப் பொலீஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை குழுவினர் கொலை செய்யப்படுகின்றனர் ஆகியவை கண்காட்சியில் இடம் பெறுகின்றன.

1981ஆம் ஆண்டு புலிகளின் கரந்தடித் தாக்குதலில் இரண்டு படையினர் மட்டுமே கொல்லப்பட்டனர்.

1982இல் ஏழு படையினர் கொல்லப்பட்டனர்.

1983இல் 14 படையினரும்—

1984இல் 128 படையினரும்—

1985இல் 229 படையினரும்— 1986இல் 1011 படையினரும்—1987இல் 2,000க்கு மேற்பட்ட படையினரும் கரந்தடித் தாக்குதல்களில் கொலலப்பட்ட புள்ளி விவரப் பட்டியலும் இந்த ரயில் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

★ 1978 அவ்ரோ விமானத் தகர்ப்பு

1983 திருநெல்வேலியில் படையினர் மீதான தாக்குதல்.

★ 1987 வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேஷன்.

★ 1987இல் நெல்லியடியில் மில்லர் நடத்திய முதலாவது கரும்புலித் தாக்குதல்.

இவற்றை எல்லாம் சித்திரிக்கும் காட்சிகளும் இங்கு வைக்கப் பட்டுள்ளன.

### ரயில் நிலையம் —3

இந்திய — ஈழப்போர் பற்றிய காட்சிகளைக் கொண்டது மூன்றாவது ரயில் நிலையம்.

★ இலங்கையில் பாதம் பதிக்க பார்சல் போட்டான்

★ இந்தியப்படை வருகை

★ இந்திய — இலங்கை கூட்டுச் சதியில் பன்னிரு வேங்கைகள் பலி.

★ தமிழீழ தேசியத் தலைவரைக் கைது செய்யும் நோக்கில் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத் திடலில் தரை இறங்கிய இந்தியப் படையை விடுதலைப் புலிகள் சுட்டுவீழ்த்துதல்.

போன்ற காட்சிகள் இங்கு இடம் பெற்றுள்ளன.

## மலரும் தமிழீழம் ரயிலின் இலக்கு

### ரயில் நிலையம் — 4

2ஆவது ஈழப்போர் காட்சிகளைக் கொண்டது நான்காவது ரயில் நிலையம்.

★ 1990 ப்ரேமதாஸாவுடன் விடுதலைப் புலிகள் நடத்திய சமாதானப் பேச்சு

★ 1990இல் யாழ். கோட்டை கைப்பற்றப்பட்டது.

★ 1992இல் அராலிக் கண்ணி வெடியில் கொப்பேகடுவ உட்பட முக்கிய தளபதிகள் கொல்லப்பட்டது.

ஆனையிறவு ஆகாய கடல் வெளிச் சமர் ஆகியவை காட்சியில் இடம் பெற்றுள்ளன.

அராலித்துறை கண்ணி வெடி பற்றிய தகவல் கொழும்புக்குக் கிடைத்தவுடன். ''மகே அம்மே என்னுடைய திட்டமெல்லாம் புலிகள் தவிடு பொடியாக்கி விட்டார்கள்'' என்கிறார் கொழும்பில் உள்ள ராணுவ உயர் அதிகாரி ஒருவர்.

அராலித்துறை ஊடாக யாழ்ப்பாணம் மீது படை எடுக்க கொப்பேகடுவ திட்டமிட்டிருந்தார். புலிகளின் கண்ணி வெடித் தாக்குதலினால் இத் திட்டம் தவிடு பொடியாகி இருந்தது.

### ரயில் நிலையம் -5

5 ஆவது ரயில் நிலையத்தில் போரும் சமாதானமும் பற்றிய காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

★ 1957பண்டா—செல்வா ஒப்பந்தம்.

★ 1983 சர்வ கட்சி மாநாடு.

★ 1985 திம்புப் பேச்சு.

★ 1987 இலங்கை — இந்தியா ஒப்பந்தம்

★ 1990 புலிகள் — அரசு பேச்சு.

★ 1994 பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு— புலிகள் பேச்சு ஆகியவை காட்சியில் இடம் பெற்றுள்ளன.

### ரயில் நிலையம் - 6

''மலரும் தமிழீழம்'' என்ற பெயர் கொண்ட ஆறாவது கடைசி ரயில் நிலையத்தில் மலரப் போகும் தமிழீழத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை காட்சிகள் சித்திரிக்கின்றன.

தமிழீழத்தின் விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கடல் போக்குவரத்து—

மற்றும் விவசாய அபிவிருத்திகள், சூழல் பாதுகாப்பு— கடல் வளம் சார்ந்த தமிழீழ எதிர்கால எழுச்சித் திட்டங்கள் வரை படங்களாக கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

தமிழீழப் போராட்டம் உருவானது எப்படி? அது எதனை நோக்கி தற்போது சென்று கொண்டிருக்கிறது? என்பவற்றை இக்கண்காட்சியைப் பார்வையிடும் எல்லோரும் — முக்கியமாக இளம் சந்ததியினர் — இலகுவில் புரிந்து கொள்ளும் விதத்தில் கண்காட்சி உருவாக்கப்பட்டுள்ளது.

செய்தி லோலன்

★

கிராண்ட்பாஸில் பேசி முடிந்ததும்

# கூட்டத்தில் இருந்து புறப்பட்ட ஒஸியை காமினி தடுத்து விட்டார்!

## மரண விசாரணையில் சாட்சியம்

கொழும்பு, நவ. 24

கிராண்ட்பாஸ் கூட்டத்தில் பேசி முடிந்ததும் ஒஸி அபேகுணசேகரா கூட்ட மேடையிலிருந்து புறப்பட்டுச் செல்ல ஆயத்தமானார். ஆனால் காமினி அவரைத் தடுத்து தொடர்ந்து மேடையில் அமரும்படி செய்தார்.

—இவ்வாறு ஒஸி அபேகுணசேகராவின் மெய்ப்பாது காவலர்களில் ஒருவரான கான்ஸ்டபிள் மனு கொடகே கீர்த்தி ரஞ்சித், ஒஸியின் மரண விசாரணையில் தெரிவித்தார்.

சம்பவம் நடந்த அன்று இரவு 7 மணிக்கு கிராண்ட்பாஸ் கூட்டத்துக்குஒஸியுடன் நாங்கள் சென்றோம். அவர் 10-10மணிக்கு பேச ஆரம்பித்தார். 11-20 மணிக்கு பேசி முடித்தார்.

அதன் பின்னர் சுமார் 10 நிமிட நேரம் மேடையில் அமர்ந்திருந்தார். பின்பு தான் புறப்பட்டுச் செல்வதற்காக காமினி திஸாநாயக்காவிடம் அவர் விடைபெறுவதைக் கண்டேன், அப்போது பிரேமச்சந்திரா பேசிக்கொண்டிருந்தார்.

காமினி திஸாநாயக்கா ஒஸியைப் போகவேண்டாம் எனத் தடுத்தார்.

அதனால் ஒஸி புறப்படுவதை தள்ளிப்போட்டு மேடையில் அமர்ந்தார்.

அதன் பின்பே குண்டு வெடித்தது. மேடையில் ஒஸி காயங்களுடன் வீழ்ந்து கிடந்தார். பாதுகாப்பு அதிகாரிகள் அவரைத் தூக்கிக் கொண்டு வந்தனர் அவர் நினைவிழந்து காணப் பட்டார். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ற பின்னரும் அவர் தண்ணீர் கேட்டு கூச்சலிட்டார். — இவ்வாறு அந்த கான்ஸ்டபிள் தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தார். (உ)

# சுவாமி பிரேமானந்தாவை கைது செய்ததற்குகண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 24

திருச்சியில் சுவாமி பிரேமானந்தா மகராஜ் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டதை சுன்னாகம் பூபால கிருஷ்ண ஆசிரமமும், சுன்னாகம் ஆனந்த மார்க்க யோக ஆசிரமமும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

இது தொடர்பாக ஆனந்த மார்க்க யோக ஆசிரமம் இந்திய மத்திய அரசுக்கு அனுப்பிய கண்டன அறிக்கையில் —

தூய மனிதராக, தூய மனத்துடன் சேவை புரிந்து வரும் மகராஜ் கைது செய்யப்பட்டதையும், அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களையும் கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளோம். இந்திய அரசு இந்த விவகாரத்தில் தீர்க்கமாகச் சிந்தித்து நல்லதோர் முடிவு எடுப்பதோடு, எதிர்காலத்திலும் மத நிறுவனங்கள் தொடர்பான தவறுகள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். — எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பூபால கிருஷ்ண ஆசிரமம் விடுத்துள்ள அறிக்கையில் —

இந்திய அரசு இந்தத் தவறான அணுகுமுறையினைக் கைவிட்டு, புனிதராக வாழ்ந்து புனிதப்பணி ஆற்றி வரும் சுவாமியை உடன் விடுதலை செய்ய வேண்டும். — எனக் கேட்டுள்ளது.

சகல மத ஸ்தாபனங்களும் இத்தகைய தவறான செயலைக் கண்டித்து நீதியைப் பெற்றுத் தர உதவ வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

# காஷ்மீர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே வேண்டும்

## இந்திய அதிகாரி கூறுகிறார்

புதுடில்லி, நவ. 24

காஷ்மீரில் நடைபெறும் நான்கு வருடகால பிரிவினைப் போரை பலாத்காரம் பாவித்து முடிவுக்குக் கொண்டுவர முடியாது; அரசியல் பேச்சுக்கள் மூலமே தீர்க்க முடியும்.

இந்தியாவின் துணை இராணுவ எல்லைக் காவல் படையின் பணிப்பாளர் நாயகம் தயா கிஷோர் ஆர்யா முன் கண்டவாறு தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நடத்திய கருத்தரங்கு ஒன்றில் பேசியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்பிரிவினைப் போருக்கு இந்திய அரசும் ஒரு காரணமாகிறது. சமூக ஒழுங்கைப் பாதுகாக்கவேண்டிய அரசு, அதனை உடைத்தெறிந்ததற்கும் பொறுப்பு ஏற்கவேண்டும் என்றும் அவர் கூறினார். (இ-எ)

## மரநடுகை

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ். மாநகராட்சி மன்றம் யாழ். நகர் பழைய பஸ் நிலையப் பகுதியில் மரங்களை நட்டு வருகின்றது.

மரங்களுக்கு தண்ணீர் இறைப்பதற்கு வசதியாக அங்கே குழாய்க் கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. (க-17)

## மக்கள் வங்கி பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், நவ. 24

''மோசடிகளை தவிர்த்தலும் கண்டு பிடித்தலும்'' என்ற தலைப்பிலான இரண்டு நாள் பயிற்சி வகுப்பு ஒன்று வடபிரதேச மக்கள் வங்கி பிராந்தியத் தலைமை அலுவலகத்தில் மக்கள் வங்கி முகாமையாளர் [illegible] றும் வங்கி உயர் அதிகாரிகளுக்கும் அண்மையில் [illegible] றது. (க-17)

## வெளிச்சம் இன்று வெளிவரும்

யாழ்ப்பாணம், நவ. 24

விடுதலைப் புலிகள் கலை' பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக இதழின் கார்த்திகை மாத இதழ் இன்று வெளி வருகின்றது.

இந்த இதழில் தமிழீழ தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரனின் 'எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கும் மாவீரர்கள்' என்ற செய்தியும் பிரம்மஞானியின் 'அபத்தமும் அர்த்தமும்' என்ற கட்டுரையும். அடேல் ஆன் எழுதிய 'உடையாத விலங்குகள்' ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பின் முதற்பகுதியும், தேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரனின் நாற்பதாவது அகவையையொட்டி 'போரியல்புதிதாய்க் காணும் புலிகளின் தலைவன் வாழி' என்ற புதுவை இரத்தினதுரையின் வாழ்த்துக் கவிதையும் மாவீரர் நாள் பாடலும் மற்றும் பல அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. (ஒ)

## இலவச மூக்கு கண்ணாடி

தென்மராட்சி, நவ. 24

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 42 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளை கடந்த 20 ஆம் திகதி இலவசமாக வழங்கினர். (க-117)

## நிவாரண உலர் உணவு

தென்மராட்சி, நவ. 24

தென்மராட்சிப் பகுதியில் உள்ள பாதிக்கப்பட்டு ஏற்கனவே நிவாரணம் பெற்ற மீனவ குடும்பங்களுக்கான இவ்வாண்டு மார்ச் மாத நான்கு வாரங்களுக்குரிய உலர் உணவுப் பொருள்கள் அந்தந்தப் பிரிவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வழங்கப்பட்டு வருவதாகவும்.

இந்த நிவாரணப் பொருள்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் [illegible] பிரதேச செயலர் டி. சுந்தரம் [illegible] (க-117)

# விதிகளை விரிவாக கூறும் "விரத நியதிகள்" நூல்

யாழ்ப்பாணம், நவ. 24

இணுவை சிவகாமி அம்மாள் திருமஞ்சத் திருப்பணிக்காக சைவப் புலவர் பொன். தெய்வேந்திரன் ஆக்கி உபகரித்த 'விரத நியதிகள்' எனும் நூலின் வெளியீட்டு விழா கடந்த 9ஆம் திகதி சிவகாமி அருள்நெறி மன்றத் தலைவர் திரு. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இணுவை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் அதிபர் சைவப் புலவர் பண்டிதர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை நூலை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்தினார். சைவப் புலவர் திரு. சு. செல்லத்துரை மதிப்புரையை வழங்கினார்.

விரத மகிமைகளையும் பன்னிரு மாதங்களும் கடைப் பிடிக்க வேண்டிய விதிகளையும், பலன்களையும் நூலாசிரியர் பொன். தெய்வேந்திரன் தெளிவாக இந்நூலில் எழுதியுள்ளார் என்று அவர்கள் பாராட்டினார்கள். (க)

## மூக்குகண்ணாடி வழங்கல்

யாழ்ப்பாணம், நவ. 24

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களில் கண் பார்வை பாதிப்புற்றோருக்கு மானிப்பாய் லயன்ஸ் கழகத்தினர் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வைத்து முக்குக்கண்ணாடிகளை வழங்கவுள்ளனர். (ஐ-3)

## வீர வணக்கக் கூட்டம்

யாழ். மாவட்டத்தில் மாவீரர் நாள் வீரவணக்கக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இன்று வியாழக்கிழமை இரவு 7-30 மணி முதல் நடைபெறும் இடங்கள் வருமாறு:

யாழ். வட்டம் — வண்ணை வரதராஜப் பெருமாள் கோயிலடி.

உடுவில் வட்டம் — மல்லாகம் பிள்ளையார் கோயில் முன்றில்.

சங்கானை வட்டம் — வட்டு திருஞானசம்பந்தர் வி.

சாவகச்சேரி வட்டம் — மட்டுவில் நுணாவில் சரஸ்வதி கனிஷ்ட வி.

கைதடி வட்டம் — நாவற்குழி ம. வி.

உடுப்பிட்டி வட்டம் — ல்வெட்டி அ. த. க. பாடசாலை. (க)

# இழந்த வளர்ச்சிகளை இணைத்து அபிவிருத்தி திட்டம் வகுக்க வேண்டும்

## ஆய்வுப் பட்டறையில் மாநகர ஆணையாளர்

யாழ்ப்பாணம், நவ. 24

''நாம் இழந்தவற்றை மீளப்பெறுவதும் மீள ஆக்குவதும் மட்டும் அல்ல எமது பொறுப்பு. பல இடைவெளியில் இழந்திருக்கக் கூடிய வளர்ச்சிகளை இணைத்த நீண்ட கால அபிவிருத்தித் திட்டத்தை வகுப்பதும் ஆகும்.''

''அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல்'' ஆய்வுப்பட்டறையின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியின் நகர அபிவிருத்தி தொடர்பான இரண்டாம் அமர்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய போது யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அரச திணைக்களங்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நடத்திய இந்த 3 நாள் ஆய்வுப் பட்டறை கடந்த 16, 17, 18 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் தமது ஆய்வில் மேலும் கூறியதாவது:

போர்க்கால சூழ்நிலையால் வழமையான வசதிகளையும் முன்னேற்றங்களையும் நாம் இழந்து இலங்கையின் ஏனைய பிரதேசங்களின் முன்னேற்றத்துடன் ஒப்பிடும் போது 20 ஆண்டுகள் பின் நிற்கின்றோம். இந்த அடிப்படையில் பிரதேச அபிவிருத்தித் திட்டம் ஒன்றை நாம் தயாரிக்க வேண்டும் என்றார்.

இரண்டாம் நாள் நிகழ்வின் ''பொருளாதாரமும் உட்கட்டு மானத்தின் சக்தி, நீர்வளம், வீதிகள், போக்குவரத்தும்'' எனும் பொருளிலான முதலாவது அமர்வுக்கு நல்லூர் பிரதேச செயலர் திருமதி க. சிவசிதம்பரம் தலைமை வகித்து ஆய்வுரை நிகழ்த்தினார்.

வடக்கு — கிழக்கின் சக்தித் தேவை பற்றி சிமெந்துத் தொழிற்சாலைப் பொறியியலாளர் திரு. வே. ஜி. சதாநந்தனும், நீர்வளம், நீர்ப்பாசனம், நீர்வழங்கல், வடிகால் அமைப்புப் பற்றி உட்கட்டுமானப் பிரதம பொறியியலாளர் திரு. கு. சிவாநந்தனும் போக்குவரத்து தொடர்பு சாதனம்பற்றி வீதி அபிவிருத்தித் திணைக்களப் பிரதம பொறியியலாளர் திரு சே. இராஜேஸ்வரனும் உரையாற்றினார்கள்.

இரண்டாவது அமர்வில் ''பிரதேச அபிவிருத்தி மையங்கள்'' என்னும் தலைப்பில் பொறியியலாளர் திரு. மா. இராமதாசன் கருத்துரை வழங்கினார். (க)

ஆளுக்கொரு பனையாவது ஆண்டுக் கொரு முறை நடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### கோழிக்குஞ்சு விநியோகம்

நான்கு நாட்கள் வளர்ச்சி அடைந்த பிலிமத் கறுப்பு வரிக்குஞ்சுகள், தலிச்சிகப்பு குஞ்சுகள், வெள்ளை சேவல் குஞ்சுகள் உடன்விற்பனைக்கு உண்டு. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதியூடாக, சிங்கம் வீதி, உடுவில். (33865)

### இலகு திருமண சேவை

25 வயது, கார்த்திகை 2, செவ்வாயற்ற பரதநாட்டியம் Diploma, அழகிய பெண்ணுக்கு Professional அல்லது பட்டதாரி மணமகன் தேவை. மணமக்கள் தேர்வுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, நாச்சிமார் கோயிலடி. (33853)

### விசேஷ கழிவு

இலகு தோசை மா, இட்டலி மா, அப்பம் மா ஆகியவற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன்கூட்டியே ஒழுங்குசெய்து விசேஷ கழிவைப் பெற்றுக்கொள்ளுங்கள். தொடர்பு: சகல அண்ணா தொழிலக கிளைகளிலும். (சி-9597)

### அப்பியாசக்கொப்பி

மில்க்வைற்சோப் மேலுறைகள் அல்லது மில்க்வைற் சலவைப்பவுடர் வெற்றுப் பக்கற் 25 எம்மிடம் சேர்ப்பித்து ஒரு அப்பியாசக்கொப்பியைப் பெற்றுக் கொள்ளலாம். "மில்க்வைற்". (சி-9728)

### மணிக்கூடுகள் திருத்துதல்

சகல எலெக்ரொனிக் சுவர், மேசை, ஓட்டோமெற்றிக், கடிகாரங்களையும் மற்றும் கசற் றேடியோக்கள், T.V., டெக்கார் கசற்றுக்களையும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ள, டில்கா வாச் அன் றேடியோ, வேக்ஸ் 286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (வானவில் அருகில்). கிளை: கண்டி றோட், சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (சி-9617)

### தேவை

ஆடை தயாரிப்பு நிலையம் ஒன்றுக்கு விதம்விதமாக மாதிரி உடைகள் வெட்டிக் கொடுப்பதில் குறைந்தது 5 வருடங்கள் அனுபவமுள்ள பெண்கள்தேவை. 5-12-94க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். இல. 720, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-9717)

### பெற்றுக்கொள்ளுங்கள்

நீரிழிவு நோயாளருக்கெனப் பாவிக்கக்கூடிய ஆட்டாமா, குரக்கன் மா, ஒடியல் மா, வறுத்த உழுந்து மா பச்சை உழுந்து மா, தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பெற்றுக்கொள்ளுமிடங்கள்: அண்ணா கோப்பிக் கடைகளான யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில் கடைகள். (9631)

## ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கீழ்வரும் பொருள்கள் 1994ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ஆம் திகதி காலை 10-30 மணியளவில் ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் வெற்றி பெறுவோர் பொருள்களுக்கான முழுப்பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் முழுமையாகச் செலுத்தி பொருள்கள் அனைத்தையும் அன்று மாலை 4-00 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்த வேண்டும்.

1. பழைய புதினப் பத்திரிகை
2. தீப்பைகளினாலான மரப்பெட்டிகள்
3. முறிந்த மரக் கொப்புகள் — ஒரு தொகுதி
4. உடைந்த கண்ணாடித் துண்டுகள்
5. வெற்று உரப்பைகள், சாக்குகள், எண்ணெய் பரல்கள்
6. அலுவலர் பாவிக்கும் வெதர்கனியான பைகள்

மேற்படி பொருள்களை 1994 கார்த்திகை மாதம் 28ஆம் திகதி காலை 9-30 மணி தொடக்கம் 10-30 மணிவரை யாழ். பல்கலைக்கழக நவீன சந்தை மக்கள் வங்கிக் கட்டடத்துக்கு அருகாமையில் உள்ள, திறந்த வெளியில் பார்வையிடலாம்.

மேலதிக விவரங்களுக்கு உதவி நிதியாளருடன் (வழங்கல்) தொடர்பு கொள்ளவும்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி-9694)

## தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மனையியல் பயிற்சிக் கல்லூரி ஒன்றிற்கு ஆசிரியர்களாக பணிபுரிய பின்வரும் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கவும்.

க. பொ. த (உயர்தரம்) மனையியல் பாடத்தில் திறமைச் சித்தி உள்ளவர்கள் அல்லது "மனைப் பொருளியலும் கைத்திறனும்" பயிற்சியில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள் 30 - 11 - 1994க்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

இல. 723,
C/O உதயன்,
யாழ்ப்பாணம். (சி-9727)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 09 — 1919

மறைவு: 04 — 12 — 1993

### அமரர் நாகலிங்கம் கனகரத்தினம்

(நாவற்குழி)

திதி: 24 — 11 — 1994

ஆண்டொன்று ஆனாலும்
ஆறாதே எம் துயர்
என்றென்றும் உங்கள் நினைவில்
ஏங்கித் தவிக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

நாவற்குழி

யா/ கோண்டாவில் ? . சி. த. க. பாடசாலை
எமது பழைய மாணவர்,
மாத்தமிழர், மாவீரர், மாவீரர்
செல்வன் இராசப்பு உதயகுமார் (கார்த்திக்)
அவர்களின்

## மாட்சி நயப்பு அரங்கு



வீரவேங்கை கார்த்திக்

### இ. உதயகுமார்

மண்ணின் மைந்தனாய்: 05 — 07 — 1964

மாவீரனாய்: 20 — 12 — 1985

இடம்: பாடசாலை மண்டபம்

காலம்: 1994 - 11 - 24 வியாழன் (இன்று) காலை 9-00 மணி

தலைவர்: திரு. இ. சிவபாதசேகரம் (அதிபர்)

★ மங்கல விளக்கேற்றல்
★ மௌன நினைந்துருகல்
★ தலைமையுரை
★ மாவீரர் குடும்பத்தினர் கௌரவிக்கப்படுதல்
★ கலை நிகழ்ச்சிகள் - பேச்சுக்கள்

முதன்மைப் பேச்சாளர்
திரு. இளம்பரிதி அவர்கள்
(அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழ். மாவட்டம்)

★ மாட்சி நயப்புப் பேருரையை ஏற்போர் உரை
திரு. இராசப்பு அவர்கள்

காலை 8-30 மணியளவில் கார்த்திக் அவர்களின் உருவப்படம் கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் திரு. இளம்பரிதி அவர்களால் திறந்து வைக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. இராசப்பு குடும்பத்தினர்,
பாடசாலை முகாமைத்துவக்குழு.

(8029)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தருமநாயகி நவரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

மலர்வு: 14—02—1933

உதிர்வு: 29—11—1988

திதி: 24 — 11 — 1994

கலைமகள், திருமகள் கடாட்சமும், நர்க்கையின் கம்பீரமும், ஒருங்கமையப் பெற்று அன்புடை அன்னையாய், கற்புடை மனைவியாய், பாசமுள்ள சகோதரியாய், மைத்துனியாய் வாழ்ந்தீரே! குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும் திகழ என்றும் இளமை பொங்கும் வதனத்துடன் வாழ்ந்தீரே!

கணவனும் பிள்ளைகளும் பதைபதைத்துக் கதற உற்றாரும், உறவினரும் கண்ணீர் சிந்த இவ்விள வயதில் இறைவனடி சேர்ந்தீரே! என்றும் எம் மனமணி விளக்காயிருந்து எமக்கு வழிகாட்டுபவரே! இறைவன் திருவடியில் பேரானந்தம் பெற்றிருக்க இறைஞ்சுகிறோம் அம்மா!

அன்புக் கணவனும்,
பிள்ளைகளும்.

1160/15, அருளம்பலம் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

### கடன் வழங்கல்

கால்நடை வளர்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பனைப் பிரிவினர் இப் பகுதியில் உள்ள இருபது பயனாளிகளுக்கு கடன்களை வழங்கவுள்ளனர்.

இம் மாதம் வழங்கவென ரூபா ஒரு லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கடன்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி பளை வட்ட அலுவலகத்தில் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

### ஜெனரேற்றர் வழங்கல்

யாழ்ப்பாணம், நவ. 24 வடபிராந்திய சுகாதார திணைக்களம் யாழ். மாநகர சுகாதார பகுதிக்கு ஜெனரேற்றர் ஒன்றை வழங்கியுள்ளது. [க-17]

## O/L '94

பரீட்சைக்காக எல்லா பாடங்களிலும் மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.

அதிக பிரதிகள் எடுப்பவர்களுக்கு 25% கழிவுண்டு

**BOND**
கல்வி நிறுவனம்
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். [8031]

## முகாமையாளர் தேவை

அனுபவமும் ஆற்றலும் மிக்கவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிறுவனத்தின் சகல பணிகளையும் நிர்வகிக்கும் திறன் படைத்தவரும் வியாபார நலனை விருத்தி செய்ய வல்லவரும் எனக் கருதுவோர் விண்ணப்பிக்கலாம்.

அச்சகத் துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுய விபரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டிய கடைசித் திகதி: 30 - 11 - 1994

இல. 721,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம். [சி-9721]

## கணக்காளர் தேவை

நாம் எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர் நிறுவனத்தின் கணக்குப் பகுதிக்கு பொறுப்பாகக் கடமையாற்றக் கூடியவராகவும் கணக்காளர் என்ற வகையில் நிர்வாகத்தினருக்கு நிதி மற்றும் நிர்வாக விடயங்களில் ஆலோசனை வழங்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

கடமைகளின்போது சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ளக் கூடியவராய் இருப்பதும் அவசியம்.

பட்டயக் கணக்காளர் / முகாமைத்துவக் கணக்காளர் தேர்வுகளில் சித்தியடைந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்சொன்ன எமது எதிர்பார்ப்புகளை நீங்கள் பூர்த்தி செய்யக் கூடியவரானால் 30 - 11 - 1994க்கு முன்னதாக சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

இல. 722,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம். [சி-9722]

சாவகச்சேரி பிரதேசசபை

1995 ஆம் ஆண்டிற்கான

## கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேசசபை அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக்கடைகள் என்பவற்றை 1995ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதிக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 19-12-1994ஆம் திகதி நண்பகல் 12-00மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 16-12-1994ஆம் திகதி பிற்பகல் 12-30 வரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரமான மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை விசேட ஆணையாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இன்னதுக்கான கேள்வி என எழுதி அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபால் மூலம் 19-12-1994ஆம் திகதி நண்பகல் 12-00மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அல்லது சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையிலுள்ள கேள்விப் பெட்டியினுள் இடுவதன் மூலம் கிடைக்கச் செய்யவும். கேள்விப்பத்திரங்கள் 19-12-1994ஆம் திகதி பி.ப. 2-00மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப்பணிமனையில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகம் கொடுக்கலாம்.

கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் தம்முடன் அடையாள அட்டை/ குடும்ப அட்டை கொண்டுவருதல் வேண்டும். கேள்விப்பத்திரங்களைப் பெறத் தகுதியற்றவர் எனக்கருதப்படும் ஒருவருக்கு விசேட ஆணையாளரால் கேள்விப் பத்திரங்கள் வழங்காது விடப்படலாம். கடந்த காலத்தில் குத்தகைப்பணம் செலுத்தத் தவறியவர்களுக்கும் எக்காரணம் கொண்டும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் மாத்திரம் குத்தகையை ஏற்று நடத்த அனுமதிக்கப்படுவர். ஆள்மாறாட்டம் செய்யப்படுமிடத்து குத்தகையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்கு உண்டு. இது சம்பந்தமாக மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேசசபைப் பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம். நிபந்தனைகளை மீறுமிடத்து கேள்விகளைப் பிற்போடவோ, இரத்துச் செய்யவோ விசேட ஆணையாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. கொல்களக் கட்டணம் அப்போதைய காலப்பகுதிக்கு அமைவாக செலுத்தப்படுதல் வேண்டும்.

### 1995 கேள்வி அறிவித்தல் அட்டவணை

| | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| | **கச்சாய் உப பணிமனை** | | | |
| 1. | கொடிகாமம் பொதுச்சந்தை | 2,00,255/- | 500/- | 250/- |
| 2. | கொடிகாமம் சந்தை மாட்டு இறைச்சிக்கடை | 45,100/- | 200/- | 200/- |
| 3. | கொடிகாமம் சந்தை ஆட்டு இறைச்சிக்கடை | 34,100/- | 200/- | 200/- |
| 4. | கொடிகாமம் சந்தை துவிச்சக்கரவண்டி. பாதுகாப்பு நிலையம் | 4000/- | 100/- | 100/- |
| 5. | கருவாட்டுக்கடை இல. 1. | 3000/- | 100/- | 100/- |
| 6. | கருவாட்டுக்கடை இல. 2. | 3000/- | 100/- | 100/- |
| | **மிருசுவில் உப பணிமனை** | | | |
| 1. | மிருசுவில் பொதுச்சந்தை | 1000/- | 100/- | 100/- |
| 2 | மிருசுவில் மாட்டு இறைச்சிக்கடை | 10,000/- | 200/- | 200/- |
| 3. | எழுதுமட்டுவாள் பொதுச்சந்தை | 1000/- | 100/- | 100/- |
| 4. | மிருசுவில் வடக்கு சந்தை | 1000/- | 100/- | 100/- |
| | **வரணி உப பணிமனை** | | | |
| 1. | வரணி பொதுச்சந்தை | 13,500/- | 200/- | 200/- |
| 2. | வரணி சந்தை மாட்டு இறைச்சிக்கடை | 12,250/- | 200/- | 200/- |
| | **கைதடி உப பணிமனை** | | | |
| 1. | கைதடி பொதுச்சந்தை | 2000/- | 100/- | 100/- |
| 2. | கைதடி ஆட்டு இறைச்சிக்கடை | 12,000/- | 200/- | 200/- |
| 3. | கைதடி மாட்டு இறைச்சிக்கடை | 13,500/- | 200/- | 200/- |

பு. சுந்தரம்பிள்ளை,
விசேட ஆணையாளர்.

சாவகச்சேரி பிரதேசசபை,
தலைமை அலுவலகம் சமநலசேவை நிலையக் கட்டடம்,
விசாலை வடக்கு, கொடிகாமம்.
10-11-94

(சி-9726)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுக் கட்டுப்பாடு அவசியம் ஆகும்

"டயபிற்றீஸ்" என்கின்ற நீரிழிவு வியாதி "நல்லதோர்" வியாதி எனக் கூறுவார்கள். ஏனெனில் வேறு சில நோய்களைப் போலல்லாது, (உதாரணமாக - புற்றுநோய்) இதனைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம். இதனால் இந்தவியாதி மூலம் பின் விளைவுகள் ஏற்படுகின்ற வேகத்தையும், தாக்கத்தையும் குறைக்கலாம்.

**டயபிற்றீஸ் என்றால் என்ன?**

நாங்கள் உயிருடன் வாழ்வதற்கு "சக்தி" அவசியம். இதற்காகவே நாம் மூன்று நேரம் உண்ணுவதோடு இடையிடையே தேநீரும் குடிக்கின்றோம்.

இவையாவும் இறுதியில் குளுக்கோசாக மாற்றப்பட்டு உடலின் சகல பகுதிகளுக்கும் இரத்தத்தினால் காவிச்செல்லப்படுகின்றன.

ஏனெனில் இதுவே உடலுக்குத் தேவையான சக்தியை வழங்குகின்ற அடிப்படை மூலக்கூறாகும். ஆனாலும் இது இரத்தத்தில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கீழ் குறையாமலும், மேலே கூடாமலும் இருக்க வேண்டும். இரத்தத்திலுள்ள குளுக்கோசின் அளவு கூடாமல் FBS 80 – 120மி. கிராம் 100 மி. லீற்றர், RBS 80 – 180 மி. கிராம் — என இருக்க வேண்டும்.

இவ்வாறு இரத்தத்திலுள்ள குளுக்கோசைக் கட்டுப்படுத்தி நெறியாள்வது 'இன்சுலின்' என்கின்ற (Insulin) ஹோமோனாகும்.

எமது வயிற்றுப் பகுதியிலுள்ள பன்கிறியஸ் (Pancreas) என்கின்ற சதையியினால் இது சுரக்கப்படுகின்றது. எனவே சதையியில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டு இன்சுலின் சுரக்கப்படுகின்ற அளவு குறையுமாயின் இரத்தத்திலுள்ள குளுக்கோசின் அளவு கட்டுக்கடங்காமல் போகும். இரத்தத்தில் மேற் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்கு மேல் ஏற்படும் குளுக்கோசின் அளவையே நீரிழிவு-டயபீற்றிஸ் வியாதி என்கின்றோம்.

**காரணிகள்**

நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான காரணிகளை இரண்டு வகைகளாக பிரிக்கலாம்.

**அ) முதற்தரக் காரணிகள் [Primary Causes]**

**I) இன்சுலினில் தங்கியிருக்கும் நீரிழிவு வியாதி (Insulin Dependant Diabetes Mellitus-Iddm)**

★ 10 — 13 வயதினருக்கு அதிகளவில் காணப்படும்.

★ மெல்லிய உடலமைப்பு உடையவர்கள்.

★ வைரசுக் கிருமிகள் காரணமாகும்.

★ பரம்பரை ஓர் முக்கிய காரணமல்ல.

★ ஆனால் HLA - DR3, DR4 பரம்பரை அலகுள்ளவர்களில் 95 சதவீதத்தினருக்கு இந்த வியாதி ஏற்படும்.

★ இயற்கையான பாதுகாப்பு முறையில் பிரச்சினை உள்ளவர்களுக்கு [Autoimmunity]

★ இன்சுலின் பற்றாக் குறை.

**(II) இன்சுலினில் தங்கியிருக்காத நீரிழிவு வியாதி (Insulin Non—Dependant Diabetes Mellitus) (Niddm)**

★ வயது முதிர்ந்தவர்கள்

★ உடல் நிறையும் பருமனும் கூடியவர்கள்.

★ HLA பரம்பரை அலகிற்குத் தொடர்பில்லை.

★ இன்சுலின் பற்றாக் குறை.

★ இன்சுலினிக்கு உடலில் எதிர்ப்புத் தன்மை ஏற்படுதல் [Insulin Resistence].

**(ஆ) இரண்டாம் தரக் காரணிகள் [Secondary Diabetes]**

★ ஈரல் அழுகல் வியாதி [Liver Cirrhosis].

★ சதையிச் சுருக்கம் [Cystic Fibrosis].

★ சதையில் தீராத வியாதி [Chronic pancreatitis].

★ சத்திர சிகிச்சை மூலம் சதையியை அகற்றுதல். [pancreatectomy].

★ சதையிப் புற்றுநோய் [Carcinoma of Pancreas]

★ குஷ்ஷிங் வியாதி

★ கழலை வியாதி [Thyrotoxicosis].

★ தயசைட் மருந்துக் குளிசை.

★ ஸ்ரீரியோயிட் மருந்துகள்.

★ கடுமையான போஷாக்குக் குறைபாடு.

உலகத்தில் பின்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு ஆகக் கூடுதலாகவும் —

அதனைத் தொடர்ந்து இறங்கு வரிசையில் சுவீடன், நோர்வே, அமெரிக்கா, ஸ்கொட்லாந்து, டென்மார்க், நியூஸிலாந்து, கனடா, இஸ்ரேல், குவைத், பிரான்ஸ். ஜப்பான் நாட்டவர்களுக்கு இந்த வியாதி குறைந்தும் — காணப்படுகின்றது.

**அறிகுறிகள்**

★ 2 – 4 வாரங்களுக்குள் பிரச்சினை ஏற்படும்.

★ அதிகளவிலும் அடிக்கடியும் சிறுநீர் கழித்தல் [Polyuria].

★ சிறுநீருடன் கனியுப்புக்களும், நீரிழப்பும் ஏற்படுவதனால் கடுமையான தாகம் [Thurst] ஏற்படும்.

★ நிறை குறைதல் [Weight Loss] ஏற்படும்.

★ கை கால்களில் அடிக்கடி புண்கள் ஏற்படுதல்.

★ புண்கள் ஆறுவதற்கு நீண்ட காலம் எடுத்தல்.

★ கண்களில் பார்வை குன்றுதல்.

★ நரம்புகளில் உணர்ச்சிகள் குன்றுதல்.

★ ஆண்மை குன்றுதல் [Impotence].

★ மாரடைப்பு ஏற்படுத்தல்.

★ விரல்கள் அழுகுதல்.

★ பசி அதிகரித்தல்.

★ தலைச்சுற்று.

**ஆபத்துக்கள்**

★ திடீரென மாரடைப்பு ஏற்படுதல்.

★ கண்களில் பாதிப்பு ஏற்பட்டு திடீரென அல்லது படிப்படியாகப் பார்வை குன்றுதல்.

★ கைகள், கால்களில் உணர்ச்சி குன்றுதல், ஊசியினால் குத்துவது போன்று உணர்தல்.

★ சிறுநீரகங்களில் பாதிப்பு ஏற்பட்டு செயலிழத்தல்.

★ உயர் இரத்த அழுத்தம் ஏற்படுதல்.

★ மூளையில் பாதிப்பு ஏற்பட்டு பாரிசவாதம் ஏற்படுதல்.

★ கைகள் கால்களுக்கு இரத்தோட்டம் குறைதல்.

★ கை கால் விரல்களில் அழுகல் ஏற்படுதல்

★ ஆண்மை குறைதல் [Impotence]

★ நிரந்தரமான மயக்கம் (Coma) ஏற்படுதல்

**சிகிச்சைமுறை**

இது அடிப்படையில் மூன்று வகைப்படும்.

அ. கட்டுப்பாடான உணவுப் பழக்கவழக்கம்

ஆ. கட்டுப்பாடான உணவுப் பழக்கவழக்கத்துடன் மருந்து, குளிசைகள் உட்கொள்ளுதல்

இ. கட்டுப்பாடான உணவுப் பழக்கவழக்கத்துடன் 'இன்சுலின் மருந்து' ஊசி மூலம் போடுதல்

★ உணவுப் பழக்கவழக்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி மேலதிகமாகவும், அடிக்கடியும், கண்டபடியும் உணவு உண்ணுதலைக் குறைக்க வேண்டும்.

★ குறிப்பாக சீனிச்சத்து செறிவாக உள்ள சோறு, பிட்டு, இடியப்பம், உருளைக் கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, இராசவள்ளிக்கிழங்கு, வற்றாளங் கிழங்கு மற்றும் ஐஸ் கிறீம், கேக், சொக்லேற், இனிப்புப்பண்டங்கள், போலி, போண்டா, லட்டு, பூரி, பூந்தி லட்டு என்பவற்றை அதிகளவிலும் அடிக்கடியும் உண்பதனையும், தேநீரில் சீனி அதிகளவு போட்டுக் குடிப்பதனையும் படிப்படியாகக் குறைத்து முற்றாக நிறுத்த வேண்டும்.

★ உடல்நிறை, உடல் பருமன் கூடியவர்கள் தமது உடல் நிறையையும் பருமனையும் உணவைக் கட்டுப்படுத்தி. உடற் பயிற்சியில் ஈடுபட்டு குறைக்க முயற்சி செய்ய வேண்டும்.

★ கொழுப்பு உணவுகளான இறைச்சி, தேங்காய் எண்ணெய், தேங்காய்சம்பல், தேங்காய்ப்பால், தயிர், நண்டு, இறால், என்பவற்றையும் குறைக்க வேண்டும்.

★ டொல்பியூற்றாமைட், குளோபுரோபமைட், கிளிபன்கிளமைட், மெற்போர்மின் போன்ற குளிசைகளும்,

★ சொலுயபிள் (Soluble) லென்டே [Lente], மனித இன்சுலின் [Human Insulin] போன்ற ஊசிமருந்துகளும் இருக்கின்றன.

அவரவருடைய வயது, வசதி, நோயின் தன்மை, கடுமை போன்றவற்றைப் பொறுத்து என்ன கொடுக்கப்படல் வேண்டுமென மருத்துவ நிபுணர் அல்லது மருத்துவரினால் தீர்மானிக்கப்படும்.

**ஆலோசனைகள்**

★ குடும்பத்தில் பெற்றோர்களுக்கு, சகோதரர்களுக்கு ஏற்கனவே நீரிழிவு வியாதி இருந்தால் சற்று அவதானமாக இருக்கவேண்டும்,

★ உடற்பருமன், உடல் நிறை கூடியவர்கள் தமது உடல் நிறையைக் கட்டுப்படுத்த நடவடிக்கைமேற்கொள்ளவேண்டும்.

★ சீனிச்சத்து நிறைந்த உணவுகளை அடிக்கடியும் அதிகளவிலும் உண்ணுவதைத் தவிர்க்க வேண்டும்.

★ மாறாக உழுந்த உணவு வகைகளான இட்லி, தோசை, மற்றும் குரக்கன் உணவுகள். இலைவகைக் கீரைகளான அகத்தியிலை, பொன்னாங்காணி, முருங்கையிலை, சண்டியிலை, தவசிமுருங்கை, முசுட்டை, முளைக்கீரை கரட், வெண்டிக்காய், பைற்றங்காய், வாழைப்பூ, சோயப்புரதம், சிறியமீன்கள், பப்பாசிப்பழம், நல்லெண்ணெய் என்பவற்றை மாற்று உணவுகளாகப் [illegible] வேண்டும்.

★ காலையில் ஏதேனும் அறவே உண்ணாமல் இரவினில் சேர்த்து அதிகளவில் உண்ணுவதைத் தவிர்க்க வேண்டும். உடல் நிறை அதிகரிப்பதற்கு இதுவும் ஓர் முக்கிய காரணமாகும்

★ ஏதாவதொரு உடற் பயிற்சியை சீராக நாள் தோறும் செய்ய வேண்டும்.

★ குழந்தைகளுக்குக் கூட இனிப்புப் பண்டங்களை அடிக்கடியும் அதிகளவிலும் கொடுத்து உடல் நிறை கூடிய பிள்ளைகளாக வளர்த்தலைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் முதன் மூன்று வயது வரை உடற்பருமன் அதிகமாகவுள்ள குழந்தை பிற்காலத்தில் எப்படியும் உடல்நிறை அதிகரிக்கும் ஆபத்து இருக்கின்றது.

★ பெண்கள் கர்ப்பமாக இருக்கும் போதும் அவதானமாகஇருக்கவேண்டும். கர்ப்பத்தின் போது நீரிழிவு நோய் ஏற்பட்டால் குழந்தை நிறைகூடி அல்லது குறைந்து பிறத்தல், பிறப்புக் குறைபாடுகளுடன் பிறத்தல், இறந்தே பிறத்தல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

## 40 வயதுக்கு மேற்பட்டோர் கவனம் தேவை

★ 40 வயதிற்குமேற்பட்டவர்கள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது தமது சலத்தையும், இரத்தத்தையும் பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

★ குறிப்பாக உடலில் திடீரென மாற்றங்கள் எதையாவது அவதானிப்பவர்கள், குடும்பத்தில் ஏற்கனவே நீரிழிவு வியாதி உள்ளவர்கள் கட்டாயமாக தமது இரத்தத்தைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

★ நீரிழிவு வியாதி உள்ளவர்கள் தமக்குரிய டயபிற்றிக் கிளினிக்கிற்கு தவறாமல் செல்லவேண்டும். தமக்குரிய மருந்துக்குளிசைகளையும், ஊசிமருந்தையும் ஒழுங்காக எடுக்கவேண்டும்.

★ தமது விருப்பத்திற்கு மருந்துகளைக் கூட்டுவதையோ, குறைப்பதையோ, புதிய மருந்துகளை வாங்கிக் குடிப்பதையோ அறவே தவிர்க்க வேண்டும்.

★ மாறி மாறி பல மருத்துவர்களிடம் சென்று ஆலோசனை பெறுவதனையும் சிகிச்சை பெறுவதனையும் தவிர்க்க வேண்டும்.

★

**வைத்திய கலாநிதி பி. ரமணிகரன்**

## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்; 18 — 05 — 1910

மறைவு; 24 — 11 — 1993

அமரர்

**சின்னத்தம்பி சோமசுந்தரம்**

எம்மை விட்டு பிரிந்து ஓராண்டு சென்றாலும், உங்கள் நினைவு உயிருள்ள வரைக்கும் எங்களை விட்டு அகலாதையா!

தங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரர், உற்றார், உறவினர்கள்.

53, K. K. S. வீதி,
கொக்குவில்.

(8032)

## சுதந்திரப் பறவைகள்

யாழ்ப்பாணம், நவ. 24

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான 'சுதந்திரப் பறவைகள்' கார்த்திகை மாத இதழ் இன்று வியாழக்கிழமை வெளிவருகிறது.

வெளிநாடு செல்லும் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்கள், மனநோயினால் ஆண்களைவிட பெண்களே அதிகம் பாதிப்படைவு, முழங்காமல், மழை பொழியாமல் ஒரு மின்னல் ஆகிய கட்டுரைகள் மற்றும் சிறுகதை, கவிதை, பெண் போராளிகளின் அனுபவங்கள் ஆகிய அம்சங்கள் இம்மாத இதழில் வெளிவந்துள்ளன. (அ)

## நினைவுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ. 24

அமரர் வ. சின்னத்தம்பி ஞாபகார்த்தப் பரிசுக்காக தனியார் கல்வி நிலையங்களில்கற்கும் 95 ஏ எல் மாணவர் மத்தியில் தாவரவியல் போட்டிப் பரீட்சை ஒன்று தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

யாழ். புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம், கன்னாதிட்டி புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம், சாவகச்சேரி பனிங்கு, பருத்தித்துறை மணியம் கல்வி நிலையம, உடுப்பிட்டி பீக்கொன் கல்வி நிலையம் ஆகியவற்றில் தாவரவியல் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கிடையில் இப்போட்டி நடைபெறுகிறது

பிரதி மாதமும் முதல் வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறும் இப் பரீட்சைகள் எதிர்வரும் ஜூன் மாதம் வரை நடைபெறும்.

அமரர் சின்னத்தம்பியின் 18 [illegible] தினமான 1995 [illegible] 17 [illegible] பரிசுகள் வழங்கப்படும். (க)

## குருபூசை

யாழ்ப்பாணம், நவ. 24

தவத்திரு வடிவேற் சுவாமிகளின் மாதாந்த குருபூசை தினம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இணுவில் பரமானந்தவல்லி ஆலய மண்டபத்தில் நடைபெறும். (உ-3)

## புதிய பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம், நவ. 24

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் "தொழிலுரிமைத்துவமும், சிறு வணிக முகாமைத்துவமும்" என்னும் புதிய பயிற்சி நெறி விரைவில் ஆரம்பிக்கப் பட இருக்கிறது.

மேற்படி பயிற்சி நெறிக்கான கல்விச் செயற்பாடுகளுக்கு தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் கிடைக்குமிடத்து அந்தப் பயிற்சி நெறியை ஆரம்பிக்க முடியும் என்று இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் தயானந்த எஸ். விஜேசேகரா யாழ். பிராந்திய இயக்குநர் திரு ச. ஆ. ஞானேந்திரனுக்கு அறிவித்துள்ளார்.

தகுதி வாய்ந்த ஆசிரியர்களின் ஒத்துழைப்புக்கிடைத்ததை அடுத்து உயர் தொழில் ஆங்கில கற்கை நெறிக்கான கல்விச் செயற்பாடுகள் நீண்ட காலத்தின் பின் ஆரம்பிக்கப் பட்டிருப்பது தெரிந்ததே (ஐ)

## அறிவித்தல்

வலி - வடக்குப் பிரதேசத்தில் (தெல்லிப்பளை, உ. அ. அ. பிரிவு) வதியும் அறுபது (60) வயதுக்கு மேற்பட்ட சித்த ஆயுள் வேத மருத்துவர்கள் அனைவரையும் மேற்படி பிரதேச உதவிச் செயலரின் வேண்டுகோளுக்கு இணங்க கீழ்க் கண்ட முகவரியுடன் 30-11-1994 க்கு முன்பு தொடர்பு கொள்ளுமாறுவேண்டுகின்றோம்.

டாக்டர் ஏ. எஸ். மகாலிங்கம் (செயலாளர்) சுகந்தி கட்டிடம் சுன்னாகம்.

(சி/5742)

யாழ். ஆஸ்பத்திரியில்

## சிரமதான முறையில் சுத்திகரிப்புப் பணி

மாவீரர் வாரத்தை ஒட்டி யாழ். ஆஸ்பத்திரியில் சுத்திகரிப்பு வேலைகள் சிரமதான முறையில் நடைபெற்று வருகின்றன.

சிரமதான சுத்திகரிப்புப் பணியை யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் செல்வி ந கனகரத்தினம் கடந்த திங்களன்று தொடக்கி வைத்தார். ஆஸ்பத்திரி காரியாலய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் அதில் பங்கு கொண்டனர்

யாழ். ஆஸ்பத்திரியின் சகல பிரிவுகளையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் கட்டம் கட்டமாக மாவீரர் வாரத்தில் சுத்திகரிப்பு சிரமதானப் பணியை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ-15)

## விதை உருளைக்கிழங்குடன் குமண இன்று வந்து சேரும்

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ். மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான 400 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'குமண' கப்பல் இன்று காங்கேசன்துறைக்கு வந்து சேரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கென ஒல்லாந்து நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கை கொழும்பில் இருந்து எடுத்துவர கப்பல் வசதியில்லாததால் முன்னாள் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் "குமண" கப்பலை வாடகைக்கு அமர்த்தியிருந்தார்.

விதை கிழங்குடன் சிமெந்து, தேங்காய் எண்ணெய் ஆகியவற்றுடன் நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து புறப்பட்ட இக்கப்பல் இன்று இரவு காங்கேசன்துறைக்கு வந்து சேரவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கைமாறிய பிரயாணப் பை

22-11-94 செவ்வாய்க்கிழமை கிளாலியிலிருந்து வரும் போது எனது பிரயாணப் பை கொடிகாமத்தில் வைத்து மாறி எடுத்துச் செல்லப்பட்டது.

றேடியோ கசற் நாடாக்கள் அடங்கிய அவர்களுடைய பிரயாணப் பை ஏனைய பொருள்களுடன் யாழ். பஸ் நிலையத்தில் உள்ள சிற்றூர்தி சேவைச் சங்க இணையக் காரியாலயத்தில் என்னால் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

எனது பிரயாணப் பையை மாறி எடுத்துச் சென்றவர் அதனை இணையக் காரியாலயத்தில் ஒப்படைத்து அவர்களினதைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

செ. கணேஸ்
லக்ஷ்மி கிறிம் கவுஸ்,
அச்சுவேலி.

(33873)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
### யாழ் கோட்டம்
## மாவீரர் நினைவு விழா

காலம்: இன்று 24-11-94 வியாழன் மாலை 5-00மணி

இடம்: யாழ். இரசிக ரஞ்ஜன சபா மண்டபம் [பெருமாள் கோயிலடி]

**நிகழ்ச்சி நிரல்**

அகவணக்கம்

வரவேற்புரை: திரு. த. வரதராஜா (செயலாளர் த. க. நி. ஒ, யாழ், மாவட்டம்)

தலைமையுரை: திரு. இரா. செல்வவடிவேல் (தலைவர் த. க. நி. ஒ. யாழ் கோட்டம்)

சிறப்புரைகள்:
1. திரு. சி. வரதராஜன் (தலைவர் த. க. நி. ஒ. யாழ். மாவட்டம்)
2. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள்

**கலை நிகழ்ச்சிகள்**

★ நாடகம் ★

இருபாலை-எக்ஸ்பிரஸ் கல்வி நிலைய மாணவர்கள் வழங்கும்

**"ராஜமுத்திரை"**

(வரலாற்று நாடகம்)

தென்னிலங்கை ஆக்கிரமிப்பை முறியடித்த தமிழீழ மன்னனின் வீரவரலாற்றுக் காவியம்

★ வழக்காடு மன்றம் ★

'குற்றவாளிக் கூண்டில் வெளிநாட்டில் வாழும் இலங்கைத்தமிழர்

நீதிபதி திரு. M. குமாரவேல் [பொருளியல் ஆசிரியர்]

| குற்றம் சுமத்துபவர்கள் | குற்றத்தை மறுப்பவர்கள் |
|---|---|
| "செஞ்சொற் செல்வன்" | "வாகீச கலாநிதி" |
| திரு. இரா. செல்வவடிவேல் | திரு. க. நாகேஸ்வரன் |
| திரு. சி. மகேந்திரன் | திரு. சி. ஆதித்தன் |
| செல்வன் S. செந்தூர்ச்செல்வன் | செல்வன் சி. சிறீதரன் |

★ தமிழீழ மக்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

முக்கிய அறிவித்தல்
யாழ். கோட்டத்தில் இன்று மாலை நேர வகுப்புகள் யாவும் நிறுத்தப்பட்டு, பொதுச்சபை உறுப்பினர்கள் யாவரும் விழா நிகழ்ச்சியில் கண்டிப்பாக கலந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

த. க. நி. ஒன்றியம்
யாழ் கோட்டம்

சி/[9730]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேமானந்தா சுவாமியின் பிணை மனு நிராகரிப்பு

சென்னை, நவ. 24
திருச்சியில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரேமானந்தா சுவாமியைப் பிணையில் விடக்கோரும் மனுவை புதுக்கோட்டை மாவட்ட தலைமை நீதிபதி நேற்று நிராகரித்தார்.

பிரேமானந்தா சுவாமியை விடுதலை செய்தால் விசாரணை பாதிக்கும் என்ற அரச வழக்கறிஞரின் வாதத்தை ஏற்றுக்கொண்டு நீதிபதி அகமத்கான் இந்த தீர்ப்பை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் பாத்திமா நகரில் உள்ள பிரேமானந்தா ஆச்சிரமத்தின் நிறுவுநரான சுவாமி பிரேமானந்தா க[illegible] அடைத்து வைத்தல் ஆகிய குற்றச்சாட்டின் பேரில் 13 நாள் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளதாக இந்திய வானொலி அறிவித்தது.

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்) (உ-3)

## இடம்பெயர்ந்த மாணவருக்கும்

# மேலதிக மதிய உணவு முத்திரை இனி கிடைக்கும்!

1976 ஆம் ஆண்டுக்கு பின் பிறந்து பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு மேலதிக மாணவர் மதிய உணவு முத்திரை வழங்கப்படவிருப்பதாக மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலகநாயகம் தெரிவித்தார்.

மாணவர்களின் மதிய உணவுக்காக வழங்கப்படும் 50 ரூபா பெறுமதியான மேலதிக உணவு முத்திரைகள் இதுவரை இடம்பெயராத, வறுமை நிவாரணம் பெறும் மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தது.

இனிமேல் பாடசாலைகளில் பயிலும் — 1976 ஆம் ஆண்டு தொடக்கம் 1989 ஆம் ஆண்டு வரைக்கும் பிறந்தவர்களுக்கு — மேலதிக முத்திரை வழங்கப்பட இருக்கிறது.

முத்திரை பெறாத மாணவர்கள் — குறிப்பாக இடம்பெயர்ந்த மற்றும் அரச ஊழியர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர் தமது பாடசாலை அதிபரிடம் கல்வி பயில்வதாக உறுதி செய்யும் கடிதத்தைப் பெற்று, கிராம சேவையாளர்களிடம் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-3)

# மாவீரர் வாரத்தை ஒட்டி மன்னாரில் சிரமதானம்

யாழ்ப்பாணம், நவ. 24
மன்னார் மாவட்டத்தில் மாவீரர் நாளையொட்டி நேற்று பெரிய அளவில் சிரமதானம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

பூநகரி வட்டப் பிரதேசத்தில் பூநகரி பிரதான வீதியில் இடம்பெற்ற இந்தச் சிரமதான நடவடிக்கையில் ஐம்பதுக்கு மேற்பட்ட டிராக்டர்கள் பயன்படுத்தப்பட்டன.

சிரமதானப் பணி மூலம் பூநகரி பிரதான பாதை செப்பனிடப்பட்டது.

அதேவேளை— கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்துக்கு செல்லும் வீதியும் நேற்று சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்டது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கேதீஸ்வரன் பத்மாவதி

குப்பிழானை பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட கேதீஸ்வரன் பத்மாவதி 21-11-94 அன்று கனடாவில் காலமாகிவிட்டார். இவர் கல்வியங்காட்டைச் சேர்ந்த அமிர்தலிங்கம் கேதீஸ்வரனின் அன்பு மனைவியும், நிலூசியா, நிறாஜ், அஜெந் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ச. சத்தியநாதன்
G. P. S. றோட்,
கல்வியங்காடு.
(33876)

### அரியகுட்டி செல்லத்துரை

(முன்னாள் தலைமைக் குமாஸ்தா தெமேதரை எஸ்டேட்)

அரியகுட்டி செல்லத்துரை காலமானார்.

இவர் காலஞ்சென்ற திருமதி லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி லோகாம்பிகை (ஆசிரியை ஊரெழு கணேச வித்தியாசாலை), திருமதி செல்லமலர் இந்திரசிங்கம் (ஆசிரியை மகாஜனாக் கல்லூரி- தெல்லிப்பளை), திருமதி செல்வராணி சின்னையா (ஆசிரியை யூனியன் கல்லூரி- தெல்லிப்பளை) ஆகியோரின் அன்புத்தந்தையாரும், காலஞ்சென்ற இரகுநாதன் (உதவி வைத்திய அதிகாரி) தருமராசா, இந்திரசிங்கம் (ஆசிரியர் மகாஜனாக் கல்லூரி), சின்னையா (ஆசிரியர் யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், வீரவேங்கை சிந்து (சரவணபவன் இரகுநாதன்), மயூரன் (பரியோவான் கல்லூரி), சிந்துஜா, சுகன்யா, சசிகாந், யனுஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஊரெழு மேற்கில் இன்று (24-11-94) வியாழக்கிழமை 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஊரெழு பொக்கணை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
திருமதி. லோகாம்பிகை
(மகள்)
ஊரெழுமேற்கு,
சுன்னாகம்.
(33874)

### விஸ்வலிங்கம் இராசகுலேந்திரன் [குட்டி அண்ணா]

கொட்டடியைப் பிறப்பிடமாகவும், தாவடி பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் இராசகுலேந்திரன் 12-11-94 இல் மதுரையில் காலமாகிவிட்டார்.

இவர் யாழ். திருப்பதி ஆடை அக பங்காளரும், சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும், கருஷன், சுதர்ஷன், நிகிலாவின் அன்புத் தந்தையும், காலம் சென்ற விஸ்வலிங்கம் சிவக்கொழுந்துவின் அன்பு மகனும், தாவடி பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த காலம் சென்ற நவரத்தினம் சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், சோமசுந்தரம், தர்மகுலேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவர்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகேந்திரன்
[சகலன்]
34/3 பழம் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
[33875]

இப்பத்திரி[illegible] (பிறைவேற் லிமிடெட்டினரால்) [illegible] 202/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24-11-1994 இல் [illegible] வெளியிடப்பட்டது.

## விவசாய, காணி மற்றும் வன வள அமைச்சு:

# ஊழல், துஷ்பிரயோகம் குறித்து விசாரிக்க மூன்று ஆணைக்குழுக்கள்!

கொழும்பு, நவ. 24
விவசாய, காணி மற்றும் வன வள அமைச்சின் கீழ் உள்ள மூன்று நிறுவனங்களில் கடந்த 17 ஆண்டுகளில் இடம்பெற்ற ஊழல் மற்றும் துஷ்பிரயோகங்கள் பற்றி விசாரணை செய்வதற்காக மூன்று ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் நியமிக்கப் பட்டுள்ளன;

மலைநாட்டு விவசாயிகளின் புனர்வாழ்வுத் திணைக்களம் விவசாய அபிவிருத்தி அதிகாரசபை, ஹடபிம அதிகார சபை ஆகியனவே இவையாகும்.

இந்த நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் பற்றி அறிவிக்கவும், இவற்றை லாபம் தரக்கூடியதாக மாற்றியமைக்கவும் இந்த ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவை ஆறுவார காலத்தினுள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இது தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்.

மலைநாட்டு விவசாயிகள் புனர்வாழ்வு திணைக்களம் தொடர்பான விசாரணைகளை நடத்தும் ஆணைக்குழுவுக்கு திரு. ஏ.பி.எல்கடுவ தலைவராக நியமிக்கப் பட்டார். வேறு இரண்டு பேர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பான தனிநபர் விசாரணை ஆணைக்குழுவுக்கு தலைவராக திரு. சோமபாலகுணதீர நியமிக்கப் பட்டுள்ளார். இவர் முன்னாள் திருமலை அரசஅதிபர் ஆவார்.

ஹடபிம அதிகாரசபை பற்றி விசாரணை செய்யும் தனிநபர் ஆணைக்குழுவுக்கு திரு. ஜி. எம். டி. சில்வா தலைவராக நியமிக்கப் பட்டார். அமைச்சர் டி.எம். ஜெயரத்தினாவின் சிபார்சுக்கமைய இந்த ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. (ஒ-எ)

# சமாதான முயற்சியை மீண்டும் ஆரம்பிப்பதே அரசின் எதிர்பார்ப்பு

## பிரதி அமைச்சர் சந்திரசேகரன் பி. பி. ஸிக்கு பேட்டி

சமாதான முயற்சியை மீண்டும் ஆரம்பிப்பதே அரசின் தீவிரஎதிர்பார்ப்பு எனப் பிரதிஅமைச்சர் பீ. சந்திரசேகரன் பி. பி. ஸி. சிங்கள சேவையான "சந்தேசிய"வுக்குத் தெரிவித்துள்ளார்

ஆயினும் நிச்சயமாக சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் எப்பொழுது ஆரம்பிக்கும் என இதுவரை முடிவு செய்யப்படவில்லை.

காமினியின் கொலையும் ஜனாதிபதித் தேர்தலும் சமாதான முயற்சியை சிறிது தாமதமாக்கியுள்ள போதிலும், அரசின் முன்னுரிமைகளில் இது தொடர்ந்து நிலவி வருவதாகப் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஏற்படும் சம்பவங்கள் சமாதான முயற்சிக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடியன என்று கருதுவது அறிவின் பாற்பட்டதல்ல எனவும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அரசியல் ரீதியாக நிலவும் தடைகள், பிரச்சினைகள் ஏதுமிருப்பின் அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு அரசு தயாராக உள்ளது எனப் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

சமாதான பேச்சுவார்த்தை தொடங்கியவுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளமை வடபகுதி மக்களை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியது எனவும்—

குறிப்பாக வடபகுதி யாழ்ப்பாண மக்களின் தனித்துவ எதிர்பார்ப்பு சமாதானம் என்பதை அரசும் விடுதலைப் புலிகளும் மறந்து விடலாகாது எனவும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை—

முதற்கட்ட சமாதானப் பேச்சுகளுடன் யாழ்ப்பாணம் சென்றிருந்த அரச பிரதிநிதிகளில் ஒருவரான நவீன் குணரத்தினவிடம் 'சந்தேசய' விசாரித்த பொழுது—

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் திகதி பற்றியோ எதிர்கால நடவடிக்கை பற்றியோ அரசு எதனையும் தங்களுக்கு இதுவரை தெரிவிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர் வாக்களித்தது சந்திரிகாவுக்கே; ஆனால்

# மட்டு. பாடசாலைகளில் இன்றும் ராணுவ முகாம்கள் செயற்படுகின்றன

## நாடாளுமன்றில் தமிழ் எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் மக்கள் தமது பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையில் தான் ஜனாதிபதித் தேர்தலில் தமது அமோக ஆதரவை சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கு அளித்தனர்.

ஆனால் மட்டக்களப்புப் பகுதிகளில் பல பாடசாலைகள் இன்னும் இராணுவ முகாம்களாகவே செயற்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி செல்வராசா நேற்று நாடாளுமன்றத்தில் இவ்வாறு கூறினார்.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:–

பாடசாலைகளில் முகாம்கள் இருப்பதால் மாணவர்களின் கல்வி தொடர்ந்தும் பாழடிக்கப்படுகிறது.

தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் இனி இல்லை எனக் கல்வி அமைச்சர் கூறுகிறார். கொடுக்கப்பட்ட நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

பாடசாலை மதிய உணவு சேவைகளை கிராம சேவகர்கள் இப்பொழுது மேற்கொள்கின்றனர். இதைப் பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

### மாவீரர் நிதியம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களினால் அனுஷ்டிக்கப்பட்டு வருவதினை யாவரும் அறிவீர்கள். இந்த வரலாற்று நாயகர்களின் நினைவு வாரத்தை ஆன்மீகத்தன்மையுடையதாகவும், அர்த்தமுடையதாகவும், எழுச்சியாகவும் கொண்டாடுவதற்கு இம்மண்ணில் வாழ்கின்ற அனைத்து மக்களும் பங்களிப்புச்செய்வது இன்றியமையாததாகின்றது. இப்பங்கேற்பில் பல்வேறு வழிகளிலும் மக்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம். அவ்வாறான செயற்திட்டங்களில் ஒன்றுதான் ''மாவீரர் நிதிய'' ஏற்பாடாகும்.

தமிழீழத்திலுள்ள அரச, தனியார் கூட்டுத்தாபன கூட்டுறவுத்துறை ஊழியர்கள், தனியார் தாபனங்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் நலன் விரும்பிகள் அனைவரும் இந்நிதியத்தின் அங்கத்தவராகலாம்.

இம்மாவீரர் நிதியத்தின் சகல முகாமைத்துவ தத்துவங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சார்ந்ததாகும். அதன் நடைமுறைச் செயற்பாடுகள் அனைத்தும் தமிழீழ நிர்வாக சேவையின் பொறுப்பாகும். இந்நிதியத்தின் பாதுகாவலர்களாக தமிழீழ வைப்பகம் செயற்படும். இந்நிதியத்திற்கு நன்கொடைகளை வழங்கும் நலன்விரும்பிகள் அதனை 903 இலக்க கணக்கில் எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கலாம். இக்கணக்கு அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பிக்கப்படும். இவ்வைபவத்தின்போது அனைவரையும் தமிழீழ வைப்பகத்திற்கு அணிதிரண்டு இம்மகத்தான சேவைக்கு ஒத்துழைப்பும், ஒத்தாசையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# 'பிளாம்பயான்' கப்பலில் நேற்று 7 பேரே வந்தனர்!

யாழ்ப்பாணம், நவ. 24
நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த பிளாம்பயான் கப்பலில் கொழும்பில் சிகிச்சை பெறச் சென்ற ஒருவரும் அவரது உதவியாளரும் மற்றும் ஐந்து பேரும் மட்டுமே வந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் நோயாளர் சேவையில் ஈடுபடும் பிளாம்பயான் கப்பலில் 20 பேர் பயணம் செய்ய வசதியுண்டு.

ஆனால் நேற்று அந்தக் கப்பலில் 7 பேரே வந்தனர். அவர்களில் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் அடங்குவர்

இக்கப்பல் இன்று திருகோணமலைக்கு திரும்பவிருக்கிறது.

கொழும்பில் சிகிச்சை முடிந்த பலர் கடற் கொந்தளிப்பு காரணமாக கப்பலில் பயணம் செய்ய முன்வரவில்லை என்று தெரிவிக்கப் பட்டது. (ஒ-3)

### சிறந்த...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காது வளைவு அமைத்திருத்தல் வேண்டும்.

✶ வீதி ஓரங்களில் உள்ள மரங்கள், வேலி, மதில் போன்றவற்றை வளைவு அமைக்கப் பாவிக்கப்படுவதைத் தவிர்த்தல்.

✶ சுதந்திரப் போராட்டத்தை பிரதிபலிக்கும் தன்மையையும், மக்கள் மனதில் விழிப்புணர்வையும், மாவீரர்களின் சாதனைகளையும் புதிய சிந்தனைக் கருக்களையும் பிரதிபலிக்கக் கூடியதாக அமைத்தல்.

இப்பரிசுத் திட்டம் காலப் போக்கில் ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கிழக்கில் தாழமுக்கம்

கொழும்பு, நவ. 24
கிழக்குக் கரையோரத்துக்கு அப்பால் கடற் பிரதேசத்தில் வளி மண்டலத்தின் கீழ் மட்டத்தில் தொடர்ந்து தாழமுக்கம் நிலவி வருகின்றது

இன்று நாட்டின் அநேகமான பிரதேசங்களுக்கு மேலாகவும் குறிப்பாக மலைநாட்டுக்கு மேலாகம் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும்.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் பிற்பகலில் அல்லது மாலையில் புயலுடன் கூடிய மழை பெய்யக் கூடும். —இவ்வாறு வளி மண்டலவியல் திணைக்களம் நேற்று அறிவித்தது. (உ-க)

### மழையின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிகளும் இடம்பெற்று வருகின்றன.

தமிழ் மண்ணுக்காக இன்னுயிரை ஈந்த மாவீரர்களுக்கு தமிழீழ மக்கள் மாவீரர் வாரத்தில் உத்வேகத்துடன் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி வருகின்றனர். (ஒ-15-17-155)

## மலையகத்தில்

# காணாமற் போனோரை கண்டறியக் கோரிக்கை

## புதிய அரசுக்கு வற்புறுத்தல்

கொழும்பு, நவ. 24
மலையகத்தில் கடந்த காலங்களில் காணாமல் போனவர்கள் பற்றிய உண்மைகளை கண்டறிய நடவடிக்கை எடுக்குமாறு புதிய அரசாங்கத்தை காணாமற் போனவர்களின் பெற்றோர் கோரியுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக இளைஞர்களை விடுதலை செய்யுமாறும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோர் கோரியுள்ளனர்.

கடந்த காலங்களில் மலையகத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர் என்றும் — அவர்கள் பற்றிய தகவல்களை வெளிக்கொணர வேண்டும் என்றும் கோரப் பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் மட்டும் 22மலையக இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலானவர்கள் 89 ஆம் ஆண்டில் இருந்து காணாமல் போனவர்கள் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ-3)

## பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், நவ. 24
யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இறுதிப் பரீட்சைகள் நேற்று முடிவடைந்தன.

இந்தப் பரீட்சைகளை நடத்துவதற்காக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த வைத்திய நிபுணர் காமினி குலதிலகா இன்று கொழும்பு திரும்புகிறார்.

பருத்தித்துறையில் இருந்து ''பிளாம்பயான்'' கப்பலில் இவர் திருகோணமலை செல்வார்.

மருத்துவ பீடத்தில் விரிவுரைகள் நடத்த வந்திருந்த வைத்திய நிபுணர் மகேசனும் இன்று கொழும்பு திரும்புகிறார். (உ-3)

## அடுத்த வருடம் ஓகஸ்டில்

# லண்டன் நகரில் முத்தமிழ் மாநாடு

## ஜெயராஜுக்கு அழைப்பு

லண்டன், நவ. 24
லண்டனில் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் பிரமாண்டமான முறையில் முத்தமிழ் விழா ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடாகி வருகிறது.

இவ்விழாவை நடத்துவதற்கான அமைப்புக் கூட்டம் அண்மையில் இங்கு நடைபெற்றது. அப்போது முத்தமிழ் விழாவின் இயல் துறைப் பொறுப்பை பிரித்தானிய கம்பன் கழகம் ஏற்றது.

ஈழத்திலிருந்து கம்பன்கழக அமைப்பாளர், கம்பவாரிதி இ. ஜெயராஜை அழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் பிரித்தானிய கம்பன்கழக அமைப்பாளர் நாயன்மார்கட்டு சிவகுமாரன் தமது கழகத்தின் ஆதரவில் திரு. ஜெயராஜுக்கு லண்டன் வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

பிரித்தானியக் கம்பன் கழகம் ஈழத்தைச் சேர்ந்த தமிழ் அபிமானிகள் சிலரால் சில காலத்தின் முன் இங்கு அமைக்கப்பட்டது. நாயன்மார்கட்டு சிவகுமாரன் அமைப்பாளராகவும், திருமலை இரா. பாலேந்திரநாதன் தலைவராகவும், திரு. மகாராஜா செயலாளராகவும் பணிபுரிகின்றனர். இயற்றுறை இணைப்பாளர், இசைத்துறை இணைப்பாளர், நாடகத்துறை இணைப்பாளர் பொறுப்புக்கள் முறையே கரவை. வீரவாகு, சிவசங்கர், ஆடலரசு ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பிரித்தானிய கம்பன் கழகம் அண்மையில் வட்டுக்கோட்டையூர் முத்தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பியின் மகன் சிவநாதனின் கவிதைகளில் சிலவற்றை ''சத்தியம் சாகாது'' என்னும் தலைப்பில் தொகுத்து வெளியிட்டுள்ளது. (அ)

# அம்பாறைப் பகுதியில் சுற்றிவளைப்பு, தேடுதல்!

## தமிழர்கள் பலர் கைது!!

யாழ்ப்பாணம், நவ. 24
அம்பாறை மாவட்டத்தில் தமிழர் பிரதேசங்கள் பல ஸ்ரீலங்கா படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது பல தமிழர்கள் ஸ்ரீலங்கா பொலீஸ் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்கள் மிகக் கொடூரமான முறையில் தாக்கப்பட்டும் உள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் சிலர் அதிரடிப்படையினரால் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதனிடையே —

கடந்த 20 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, கோணவில் பகுதியில் பொலீஸ் அதிரடிப்படையினர் தமிழர் ஒருவரின் வீட்டை உடைத்து நாசம் செய்துள்ளனர். (உ-எ)

# பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறைந்தன!

யாழ்ப்பாணம், நவ. 24
யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் குற்றச்செயல்கள் வெகுவாகக் குறைந்துள்ளன.

குறிப்பாக பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பெரும் எண்ணிக்கையில் வீழ்ச்சியடைந்துள்ளன என்று அறிவிக்கப்பட்டது.

தமிழீழ காவல்துறையின், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான பிரிவில் பெறப்பட்டுள்ள புள்ளி விவரங்களின்படி—

1992 ஆம் ஆண்டு 1, 307 ஆக இருந்த இத்தகைய குற்றங்கள் கடந்த ஆண்டில். 157 ஆக குறைந்துள்ளன.

பெண்ணைக் கொடுமைப்படுத்தல், பெண் கடத்தல், திருமணம்செய்து பின் பெண்ணை விட்டுப் பிரிதல் போன்ற வேறு சில குற்றங்கள் கடந்த ஆண்டில் பதிவாகவில்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தால் பெண்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வும், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் வீழ்ச்சியடைய ஏதுவாக அமைந்ததாகக் கூறப்படுகிறது. (உ-3)

## கூட்டுறவு சங்கங்கள் நிலை மோசம்

யாழ்ப்பாணம், நவ. 24
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 27 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் சில சங்கங்களின் நிதி மற்றும் தொழிற்பாடு மூலதனம் கடந்த ஆறுமாத காலமாக மோசமான நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானால் இச்சங்கங்கள் செயலிழக்க வேண்டி வரும் என்று சங்கங்களின் மாதாந்த செயற்பாட்டு அறிக்கையில் இருந்து தெரிய வந்துள்ளது. (உ17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org